வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු








Email : eelanaduweekly@gmail.com    மலர் : 05    23.05.2024 வியாழக்கிழமை    இதழ் : 144    பக்கங்கள் : 12


# ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும்!

## அமைச்சரவைக்கு அறிவித்தார் ரணில்

கொழும்பு, மே. 23

திட்டமிட்டப்படி இந்த ஆண்டு உரிய காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் நடைபெற்ற தனது அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, அரசாங்கம் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அல்ல, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காகவே பணம் ஒதுக்கியுள்ளது என அமைச்சர்களிடம் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, முதலில் பாராளுமன்றத் தேர்தலை நடத்தவேண்டும் என்ற கோரிக்கை அண்மைய நாட்களாக கொழும்பு

11

## செப். 15இல் புலமைப்பரிசில் பரீட்சை

கொழும்பு, மே 23

தரம் - 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் 15ஆம் திகதி நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம அறிவித்துள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 27ஆம் திகதி

11

## வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்வதற்கு தடை

யாழ்ப்பாணம், மே 23

வலி. வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பொது மக்கள் செல்வதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது. அந்தப் பிரதேசங்களில் வெடிபொருட்கள் காணப்படுகின்றன என்று தெரிவித்தே இந்தத் தடையை இராணுவம் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மார்ச் 22ஆம் திகதி ஜனாதிபதி ரணிலின் அறிவிப்பில் விடுவிக்கப்பட்ட வயாவிளான், பலாலி பிரதேசங்களின் 234 ஏக்கர் காணிகள் - ஜே/244, ஜே/245, ஜே/252, ஜே/253, ஜே/254 ஆகிய கிராம சேவகர் பகுதிகளுக்கே பொதுமக்கள் செல்லத் தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், விடுவிக்கப்பட்ட இந்தப் பகுதிகளுக்கு ஆளுநரின் தலையீட்டைத் தொடர்ந்து

11

# போருக்கு பின் இலங்கையில் மதப் பதற்றங்கள் அதிகரிப்பு

## சர்வதேச மத சுதந்திரத்துக்கான அமெரிக்க ஆணைக்குழு

நியூயோர்க், மே 23


உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான ஆண்டுகளில் சிறுபான்மை மதத்தினருக்கு எதிரான பாகுபாடு - குறிப்பாக, தமிழ் இந்துக்கள், தமிழ் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகியோருக்கு எதிராக மதப்பதற்றங்கள் அதிகரித்துள்ளன. வடக்கு, கிழக்கில் உள்ள கோவில்கள் உட்பட்ட வழிபாட்டுத் தலங்களை அபகரிக்கும் முயற்சிகள் இந்தப் பதற்றத்தை தீவிரப்படுத்தியுள்ளன.

- இவ்வாறு சர்வதேச மத சுதந்திரத்துக்கான அமெரிக்க ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்த ஆணைக்குழு மெய்நிகர் வழியில் நடத்திய விசாரணையில் இலங்கையில் மத சுதந்திரம் வீழ்ச்சி கண்டு வருகின்றது என்று பலரும் கருத்துரைத்துள்ளனர்.

மெய்நிகர் வழி சந்திப்பில் மனித உரிமை சட்டத்தரணியும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்

11



முருகப் பெருமான் அவதரித்த தினமான வைகாசி விசாகமான நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் முருகப்பெருமான் எழுந்தருளிய காட்சி.

(படம் - ஐ. சிவசாந்தன்)

## சீரற்ற காலநிலையால் 68 ஆயிரம் பேர் பாதிப்பு

கொழும்பு, மே 23

நாட்டில் அண்மைநாட்களாக நிலவும் சீரற்ற காலநிலையால் 17 ஆயிரத்து 325 குடும்பங்களை சேர்ந்த 68 ஆயிரத்து 79 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், மரம் முறிந்ததில் காலியில் ஒருவர் மரணமானார். இதேசமயம், இரத்தினபுரி, அநுராதபுரத்தில் 11 பேர் காயமடைந்தனர்.

கடும் மழை மற்றும் காற்றால், யாழ்ப்பாணம், கொழும்பு, புத்தளம், இரத்தினபுரி, கேகாலை, அநுராதபுரம், கண்டி, காலி, களுத்துறை கம்பஹா, அம்பாந்தோட்டை, பதுளை, மாத்தறை, குருநாகல்,

11

## வாக்காளர் பட்டியல் ஜூலைக்குள் இறுதி!

கொழும்பு, மே 23

2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் ஜூலை நடுப்பகுதிக்குள் இறுதி செய்யப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்காளர் பட்டியல் தொடர்பில் எழுந்துள்ள ஆட்சேபனைகள், மேன்முறையீடுகளை மீளாய்வு செய்யும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்க

11

## பொலிஸ் உத்தியோகத்தரின் வாள்வெட்டில் இருவர் காயம்!

யாழ்ப்பாணம், மே 23

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நடத்தினார் என்று கூறப்படும் வாள்வெட்டு சம்பவத்தில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

தொல்புரம் மத்தியில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த பானுஜன், ஜனார்த்தனன்

11

## ஷிராந்தி ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளுக்கு என்ன நடந்தது?

### மன்னிப்பு சபையின் செயலாளர் நாயகம் கேள்வி எழுப்பினார் என்கிறார் சிறிதரன்

கொழும்பு, மே. 23

இறுதி யுத்தத்தின் போது அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட, குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸின் துணைவியார் ஷிராந்தி ராஜபஷவிடம் கையளிக்கப்பட்ட குழந்தைகளுக்கு என்ன நடந்தது என சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் கேள்வியெழுப்பினார் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன்

11

## அமெரிக்கா கேட்டபடி நடந்திருந்தால் தமிழீழம் உருவாக்கப்பட்டிருக்கும்!

### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, மே 23

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை அமெரிக்கா கோரியபடி கையளித்திருந்தால் இலங்கையில் தமிழீழம் உருவாகியிருக்கும் - இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை உரையாற்றிய அவர்,

"இலங்கை படையினரால் தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடியாமல் போயிருந்தால், தெற்காசியாவின் இஸ்ரேலாக தமிழீழம் உருவாக்கப்பட்டிருக்கும்.

இன்று இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காசா பிரதேசத்தை போன்று சிங்களவர்கள் வாழும் பிரதேசம்

11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

இந்த ஊர்க்குருவி பத்திரிகையாளராக பயிற்சி பெறுவதற்காக 'ஈழநாடு' வில் சேர்ந்திருந்த ஆரம்ப நாட்கள் அவை.

ஒருநாள் ஆசிரிய பீடத்துக்கு வந்த நிர்வாக ஆசிரியர் காலஞ்சென்ற என். சபாரத்தினம் அவர்கள், ஊர்க்குருவி எதிரே வந்து "நீங்கள்தான் புதிதாக வந்த ஆளா?" என்று கேட்டு வழக்கமான உரையாடல்களின் பின்னர் சொன்னார்:

"செய்தி என்றால், நாய் மனுசனைக் கடித்தால் அது செய்தி அல்ல, மனுசன் நாயைக் கடித்தால்தான் செய்தி" என்றார்.

அப்போது, தமிழ் அரசியலில் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் கோலோச்சிய காலம்.

இந்த ஊர்க்குருவி, சிறுபிள்ளைபோல, "சேர், நாய் அமிர்தலிங்கத்தைக் கடிச்சால் செய்திதானே?" என்றேன். அவருக்கு அன்று என்மீது ஏற்பட்ட கோபம், அவர் பத்திரிகை ஆசிரியராக பணியாற்றும் வரை மறைந்ததாகத் தெரியவில்லை.

நமது மூத்த ஊடகரும் பல ஊடகவிலாளர்களின் குரு என்று போற்றக்கூடியவருமான வீரகத்தி தனபாலசிங்கம் அவர்கள் தனது 'எக்ஸ்' தளத்தில் எழுதியுள்ள குறிப்பு ஒன்று இந்த ஊர்க்குருவியின் கவனத்தைப் பெற்றிருந்தது.

"டென்மார்க்கில் முதன்முறையாக பிரபாகரனின் சகோதரர் அவருக்கு அஞ்சலி செலுத்திய நிகழ்வு குறித்த செய்தியை இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ் நாளிதழ்கள் வெளியிடவில்லை. ஏன் என்று கேட்டபோது, அவர்கள் அதை பெரிதாகக் கருதவில்லை என்று பதில் வந்தது. ஆனால், அதே நாளிதழ்கள் கடந்த நவம்பரில் போலி துவாரகாவின் மாவீரர் தின உரைக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தன." - இதுவே, தனபாலசிங்கம் அவர்களின் குறிப்பு.

உண்மைதான், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பதினைந்தாவது நினைவு அஞ்சலி நிகழ்வு ஒன்றை டென்மார்க்கில் வாழும் அவரது மூத்த சகோதரர் வேலுப்பிள்ளை மனோகரன் குடும்பத்தினர் பெரும் சனக்கூட்டத்தின் மத்தியில் கடந்த பதினெட்டாம் திகதி டென்மார்க்கில் நடத்தியிருந்தனர்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தை நடத்தி முழு உலகமும் திரும்பிப் பார்க்க வைத்த ஒரு தலைவர் மறைந்து பதினைந்து வருடங்களாகி விட்டன. அதற்கு இடையே பதினைந்து மாவீரர் தினங்கள் கடந்துவிட்டன. ஆனால், எந்த மாவீரர் தினத்திலும் அவர் நினைவுகொள்ளப்படவில்லை.

அதற்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் யுத்தம் மௌனிக்கப்பட்ட காலத்திலிருந்து தமிழகத்தில் இருந்து அவர் இன்னமும் உயிருடன் இருக்கிறார் என்று தொடர்ச்சியாகக் கூறப்பட்டு வருவதும் ஒரு காரணமாக இருக்கலாம். தமிழகத்தில் ஈழ ஆதரவு தலைவர்களில் முக்கியமானவரான பழ. நெடுமாறன், ஈழத்தின் 'உணர்ச்சிக் கவிஞர்' காசி ஆனந்தன் ஆகியோர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்று கூறிவந்தவர்களில் முக்கியமானவர்கள். யுத்தம் முடிவடைந்த பின்னர் உரத்து இந்த விடயத்தைக் கூறிவந்த நெடுமாறன், பின்னர் அதனைப்பற்றி பொதுவெளியில் பெரிதும் பிரஸ்தாபிப்பதைத் தவிர்த்து வந்தார். பின்னர் திடீரென்று கடந்த ஆண்டு பிரபாகரன் மட்டு மன்றி அவரின் மனைவி, மகளும் உயிருடன் இருக்கின்றனர் என்றும் தான் அவர்களுடன் உரையாடியாடினார் எனவும் அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

இதன் உச்சமாக கடந்த ஆண்டு ஒருவரை பிரபாகரனின் மகள் என்று கூறி அவரை மாவீரர் தின உரையையும் ஆற்ற வைத்து முழு தமிழ் இனத்தையும் கேலிக்கு உள்ளாக்கினர் சிலர். விடுதலைப் புலிகளின் தலைவர் உயிருடன் இருந்த போதோ அல்லது அதன் பின்னரோ இதைவிட அவரை கேவலப்படுத்தியவர்கள் இருக்கமுடியாது.

ஆனால், பிரபாகரன் உயிருடன் இருந்த போதும் சரி அல்லது அவர் மறைந்த கடந்த பதினைந்து ஆண்டுகளிலும் சரி பொதுவெளியில் எப்போதுமே தோன்றியிருக்காத அவரின் சகோதரர் குடும்பத்தினர் கடந்த ஆண்டு திடீரென்று பொதுவெளியில் வந்து, "தலைவர் பிரபாகரன் உயிருடன் இல்லை", என்று அறிவித்தனர்.

அவர்கள் அவ்வாறு அறிவிப்பதற்குக் காரணமும் இல்லாமல் இருக்கவில்லை. கடந்த ஆண்டு மாவீரர் தினத்தில் போலி துவாரகா உருவாகுவதற்கு சில மாதங்கள் முன்னதாக தன்னை மதிவதனியின் (தலைவர் பிரபாகரனின் மனைவி) சகோதரி என்று அறிமுகம் செய்துகொண்ட ஒருவர் மதிவதினியும் அவர் மகளும் உயிருடன் இருக்கின்றனர் என்றும் தான் அவர்களை நேரில் சந்தித்துவிட்டு வந்தாரென்றும் காணொலி ஒன்றை வெளியிட்டார்.

இதன் பின்னரே, மனோகரனின் மகன் வெளிஉலகுக்கு வந்தார். "தனது சித்தப்பா (பிரபாகரன்) உயிருடன் இல்லை" என்று திட்டவட்டமாக அறிவித்ததுடன் இந்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். இவர்களே இப்போது கடந்த பதினெட்டாம் திகதி பிரபாகரனுக்கு நினைவேந்தலை நடத்தியிருந்தனர்.

ஆனால், இந்த நினைவேந்தல் நிகழ்வுக்கு பிரபாகரனின் சகோதரர் ஏற்பாடு செய்திருந்தாலும் அந்த வைபவத்தில் காணப்பட்டவர்கள் சர்ச்சைக்குரியவர்கள் என்பதும் அவர்கள் இந்த நிகழ்வுடன் சம்பந்தப்பட்டமையும் பல சந்தேகங்களை ஏற்படுத்தின என்பதும் கவனிக்கத்தக்கது.

கடந்த சில வருடங்களாக புதுடில்லியில் ஈழ ஆதரவு கருத்தரங்குகளை நடத்திக்கொண்டும் - ஈழத்தில் இந்துக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்வதன் மூலம் இந்திய ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் ஆதரவைப் பெற்று 'தமிழீழம்' பெற்றுவிடலாம் என்றும் புதிய கோஷத்துடன் வலம் வந்துகொண்டிருக்கும் முக்கிய 'பிரமுகர்கள்' சிலரே அந்த டென்மார்க் வைபவத்தில் முன்னின்றனர். இன்று இந்தியாவில், அதுவும் புதுடில்லியில் ஈழஆதரவு மாநாட்டை ஈழத் தமிழர்கள் நடத்துகின்றார்கள் என்றால் அதன் பின்னணியில் யார் இருப்பார்கள் என்பது ஆராய்ச்சி செய்யவேண்டிய ஒன்றல்ல.

தமது அமைப்பின் சார்பில் வீரச்சாவடைந்த போராளிகள் எல்லோரையும் விடுதலைப் புலிகள் மாவீரர் தினத்தில் மாத்திரமே நினைவுகூருகின்றமை அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். அப்படியிருக்கையில், முள்ளிவாய்க்காலில் மரணித்த ஆயிரக்கணக்கான மக்களின் நினைவுதினம் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படும்வேளையில் தலைவர் பிரபாகரன் அந்த நாளில்தான் படுகொலை செய்யப்பட்டார் என்று அறிவிக்க முயல்வது பல சந்தேகங்களை தோற்றுவித்திருக்கின்றன. உண்மையில், பிரபாகரனுக்கு அஞ்சலி செலுத்த விரும்பியிருந்தால் அதனை எதிர்வரும் மாவீரர் தினத்திலேயே செய்திருக்கலாம்.

இந்த சந்தேகங்கள்தான் இலங்கையில் தமிழ் நாளிதழ்கள் அந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்காததற்கு காரணமாக இருக்கலாமோ தெரியவில்லை.!

நாய் மனிதனைக் கடித்தால் அது செய்தி அல்ல என்பதுபோல நினைத்தார்களோ தெரியவில்லை.!

**ஊர்க்குருவி.**

# மன்னாரில் 160 ஏக்கர் காணிகள் இந்திய நிறுவனத்துக்கு விற்பனை

## உள்ளூர் தமிழ்க் குடும்பங்கள் பாதிப்பு

மன்னார், மே. 23

மன்னார் - நடுக்குடா பகுதியில் உள்ள தமிழர்களின் குடியிருப்புக் காணி உட்பட 160 ஏக்கர் நிலம் மணல் அகழ்வுக்காக இந்திய நிறுவனமொன்றுக்கு விற்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, குறித்த நிலப்பரப்பைச் சுற்றிலும் கொங்கிரிட் தூண்கள் மற்றும் முட்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், மணல் அகழ்வுக்காக இந்தப் பகுதியில் உள்ள மரங்கள் வெட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக சுமார் 10 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

உத்தியோகபூர்வமாக இல்லாத போதிலும், பலாலி சர்வதேச விமான நிலையம், பல்வேறு வேலைத்திட்டங்கள், படகு சேவை ஆகியவற்றை ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் இந்திய வடக்கு - கிழக்கில் தமது கால்தடத்தை படிப்படியாக பதிவு செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பசுக்களிடையே வேகமாக பரவுகின்றது அம்மை நோய்

கொழும்பு, மே. 23

நுவரெலியா மாவட்டத்தில் கால்நடை பண்ணையாளர்களால் வளர்க்கப்படும் பசு மாடுகளுக்கு அம்மை நோய் வேகமாக பரவி வரும் நிலையில், பல கால்நடைகள் உயிரிழந்துள்ளதாக தலவாக்கலை மற்றும் கொட்டகலை பிரதேசத்திற்கு பொறுப்பான அரச கால்நடை வைத்திய அதிகாரி சுரேஷ்குமார் தெரிவித்தார்.

உள்நாட்டு திரவப் பால் உற்பத்தியில் சுமார் 33 வீதம் மத்திய மாகாணத்தில் இருந்து பெறப்படுகிறது. இதில் 12 வீதம் நுவரெலியா மாவட்டத்தில் இருந்து கிடைக்கப்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், கால்நடைகளிடையே அம்மை நோய் பரவி வருவதன் காரணமாக பாதிக்கப்பட்ட பசு மாடுகள் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, நுவரெலியா மாவட்டத்தில் நாளாந்த பால் உற்பத்தி குறைவடைந்துள்ளதாக அரச கால்நடை வைத்திய அதிகாரி சுரேஷ் குமார் தெரிவித்தார்.

அத்துடன், பசு மாடுகளுக்கு பரவும் அம்மை நோயை கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசி செலுத்தப்பட வேண்டுமெனவும், சுகாதார அமைச்சிடம் தடுப்பூசி இல்லாததன் காரணமாக நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# விபத்தில் உயிரிழந்த கணவன்: உரிமை கோரும் 4 மனைவிகள்

கொழும்பு, மே. 23

குளியாப்பிட்டிய மருத்துவ பீடத்துக் அருகில் இடம்பெற்ற விபத தில் பரிதாபகரமாக ஒரு குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

தற்போது இவரின் சடலத்தை ஏற்றுக்கொள்ள நான்கு மனைவிகள் முன்வந்துள்ளதாக குளியாப்பிட்டிய வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலனறுவை உட்பட பல பிரதேசங்களில் வசிக்கும் பிரேமரத்ன அதிகாரி என்ற 59 வயதுடைய நபரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

சைக்கிளில் பயணித்த இருவரும் குருநாகல் நோக்கிச் சென்ற காரை பின்தொடர்ந்து துரத்த முற்பட்ட போதே இவ் விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது குறித்த நபர், குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தற்போது அவரது சடலத்தை 4 மனைவிகள் உரிமை கோரியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சட்டத்தின்படி திருமணம் செய்து கொண்ட மனைவியிடம் சடலத்தை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 23

"பலஸ்தீன மண்ணின் காஸாவில் மரண ஓலம் விழிக்குமா உலகம்?" என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞான படிப்பு வட்ட விசேட கலந்துரையாடல் நாளைவெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கே. கே. எஸ். வீதி கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கிய பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தலைமையுரையை யாழ். பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலை சிரேஷ்ட பதிவாளர் ஆர். கிருஷ்ணகுமார், ஆய்வுரையை இலங்கை திறந்த பல்கலைக்கழக வெகுஜன ஊடகம் மற்றும் தொடர்பாடல் கற்கை துறையின் வருகைதரு விரிவுரையாளரான கனகநாயகம் வேலழகன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ஐ)

# பஸ் மோதி மாணவி உயிரிழப்பு!

கொழும்பு, மே. 23

கம்பளை பொலிஸ் வலயத்துக் குட்பட்ட பகுதியில் பஸ் மோதி பாடசாலை மாணவியொருவர் பலியாகியுள்ளார். நேற்று காலையே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

பேரவிலயிலிருந்து கம்பளை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த பஸ்ஸே, உட ஹேந்தன்ன சேனாதீர தேசிய பாடசாலைக்கு முன்னால் மாணவி மீது மோதியுள்ளது.

படுகாயமடைந்த தரம் ஐந்தில் கல்வி பயிலும் ஹன்சமாலி என்ற 10 வயது மாணவியொருவரே, குருந்து வந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அன்று காலை பஸ்ஸில் இருந்து இறங்கி, பாடசாலைக்கு செல்லும் வழியிலேயே பஸ் மோதியுள்ளது. மாணவியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக குருந்துவந்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
23.05.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 10

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இலங்கையில் ஐ. எஸ். ஐ. எஸ்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் உள்ளூர் அரசியல் வாதிகளுக்கு - குறிப்பாக, ராஜபக்ஷ குடும்பத்துக்கு தொடர்பிருப்பதாகக் கூறப்பட்டுவரும் நிலையில், ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய - இலங்கையைச் சேர்ந்த நால்வர் இந்தியாவில் கைது செய்யப்பட்டிருக்கின்றமையை இந்திய அதிகாரிகள் உறுதிப்படுத்தியிருக்கின்றனர். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் இவ்வாறானதொரு செய்தி வெளியாகியிருக்கின்றது. இதன் மூலம் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் ஐ. எஸ். ஆதரவாளர்கள் இருக்கின்றனர் என்பது மீண்டுமொரு முறை உறுதியாகியிருக்கின்றது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சனல் - 4 வெளியிட்ட காணொலி இலங்கையின் உள்ளக அரசியலில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. அது இப்போதும், அவ்வப்போது பேசு பொருளாகின்றது. ஜனாதிபதித் தேர்தலின்போது இது மேலும் தீவிரமடைய அதிக வாய்ப்பு உண்டு. குறிப்பாக, முஸ்லிம் கட்சிகளுடன் கூட்டு வைத்திருக்கும் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்மீது அவ்வாறான கற்கள் வீசப்படலாம்.

ஐ. எஸ். ஐ. எஸ். ஓர் எல்லைதாண்டிய இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பு. அதனை ஒருபோதுமே உள்ளூர் அரசியல்வாதிகள் பயன்படுத்தமுடியாது. ஏனெனில், அவர்கள் அடிப்படையில் உள்ளூர் அரசியலுக்கும் எதிரானவர்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இஸ்லாமிய அரசு ஒன்று மட்டுமே சரியானது. அதனை ஸ்தாபிப்பதற்காக எவரையும் பயன்படுத்தலாம் - எவரையும் அழிக்கலாம் என்பதே அவர்களுடைய அணுகுமுறையாகும். இந்த அடிப்படையில்தான் உலகெங்கும் அவர்கள் செயல்பட்டு வருகின்றனர். ஆனால், அவர்கள் தங்களின் இலக்கைப் பூர்த்தி செய்வதற்காக உள்ளூர் அரசியல் தரப்புகளை பயன்படுத்திக் கொள்ளலாம் - அதற்கான வாய்ப்பு உண்டு.


இலங்கைத் தீவில் இஸ்லாமிய அடிப்படைவாத குழுக்கள் நீண்ட காலமாக செயல்பட்டு வருகின்றன. விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றி பெறுவதை மட்டுமே இலக்காகக் கொண்டிருந்த புலனாய்வு கட்டமைப்புகள், இஸ்லாமிய அமைப்புகள் தொடர்பில் எந்தளவு கரிசனையுடன் இருந்தன. அவர்கள்மீது தொடர்ச்சியான கண்காணிப்பை கொண்டிருந்தனவா - என்பது தொடர்பில் கேள்விகள் இருக்கலாம்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பு இலகுவாக இலங்கைக்குள் உள்நுழைந்திருக்கின்றது. அடிப்படையில் ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பு என்பது நபர்களல்ல. மாறாக, அந்த அமைப்புக்கான கருத்தியலாகும். அந்தக் கருத்தியலை ஏற்றுக்கொள்பவர்கள் தன்னிச்சையாகவே இயங்க முடியும். பின்னர் சரியான தொடர்புகள் கிடைக்கும்போது, அவர்கள் உலகளாவிய வலையமைப்பின்கீழ் வருகின்றனர். அவ்வாறுதான் இலங்கையை சேர்ந்த முஸ்லிம் நபர்கள் இதனுடன் இணைந்திருக்கின்றனர்.

ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாத அமைப்பின் முதல் இலக்கு அமெரிக்காவும் இஸ்ரேலுமாகும். பொதுவாகவே முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் - குறிப்பாக, மத விடயங்களில் தீவிர ஈடுபாடு உள்ளவர்கள் மத்தியில் அமெரிக்கா எதிர்ப்பும் யூத எதிர்ப்பும் இயல்பாகவே இருப்பதுண்டு. இவ்வாறானவர்கள் மத்தியில்தான் ஐ. எஸ். ஐ. எஸ். ஆதரவாளர்கள் உருவாகின்றனர். ஏனெனில், ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பின் இலக்கு உலகெங்கும் அமெரிக்கர்களையும் யூதர்களையும் கொல்வதாகும். அந்த அடிப்படையில்தான், இலங்கையில் தாக்குதலுக்கான இலக்குகள் திட்டமிடப்பட்டிருந்தன.

ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி வேண்டும் என்று கத்தோலிக்க அமைப்புகள் கோரி வரும் நிலையில், மேலும் நான்கு ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றமை நிலைமையை மேலும் சிக்கலாக்கியிருக்கின்றது. இதேவேளை, இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் அவ்வாறான குழுக்கள் இல்லையென்று வாதிட முற்பட்டவர்களின் கதைகளும் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன.

# மக்கள் வசிக்கும் பகுதிக்குள் கடல் நீர் புகுந்ததால் பதற்றம்



மன்னார், மே. 23

மன்னார் - நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வங்காலை வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் நேற்று மதியம் திடீரென கடல் நீர் மக்கள் வசிக்கும் பகுதிக்குள் உட்புகுந்துள்ளது

நேற்று அதிகாலை முதல் மன்னார் மாவட்டத்தில் பலத்த காற்று வீசி வருகின்ற நிலையில், மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை.

இந் நிலையில் வங்காலை வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் நேற்று மதியம் திடீரென கடல் நீர் உட்புகுந்ததோடு, கடற்கரையில் கட்டப்பட்டிருந்த படகுகள் மற்றும் வலைகள் நீரில் மிதந்தன.

எனினும் படகுகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என மீனவர்கள் தெரிவித்தனர்.

திடீரென கடல் நீர் உட்புகுந்தமையினால் வங்காலை மீனவர்கள் மற்றும் கிராம மக்கள் அச்சத்துக்கு உள்ளாகினர்.

இந்நிலையில் வங்காலை பங்குத்தந்தை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் குறித்த பகுதிக்குச் சென்று நிலைமையை பார்வையிட்டதோடு, சம்பவம் தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். (அ)

# சந்நிதி-கதிர்காம பாதயாத்திரை குழுவினர் இன்று செம்மலையில்



முல்லைத்தீவு, மே. 23

இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரையான சந்நதி - கதிர்காமம் பாதயாத்திரை ஜெயாவேல்சாமி தலைமையிலான குழுவினர் 12 நாட்களின் பின்னர் இன்று வியாழக்கிழமை செம்மலையை அடையவுள்ளனர்.

வரலாற்று பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் இரு தினங்கள் தங்கியிருந்து சற்று ஓய்வெடுத்து பின்னர் மீண்டும் செவ்வாய்க் கிழமை யாத்திரையை ஆரம்பித்தார்கள்.

பாதயாத்திரைக் குழுவினர் நேற்று முன்தினம் மாமூலை நேற்று குமுழமுனை சென்று தங்கியிருந்தனர் .

நாளை வெள்ளிக்கிழமை குழுவினர் கொக்கிளாய் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் பிரவேசிக்க உள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரை யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமானது தெரிந்ததே. (அ)

# திடீரென மயங்கி வீழ்ந்து ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணம், மே. 23

ஊரெழு கிழக்கில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவர், திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

ஊரெழுப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகே நேற்று முன்தினம் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

48 வயதுடைய சிங்கரத்தினம் சசிக்குமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

வைகாசி - 23 வியாழக்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 10
நல்ல நேரம் : 10.30 - 11.30
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : பௌர்ணமி




**மேடம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். மேலதிகாரி உதவுவார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**மிதுனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். பழைய கடன் பிரச்சினை கட்டுக்குள் வரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் வரும். உங்கள் கை ஓங்கும். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**
எதிர்பார்ப்புகள் தடையின்றி முடிவடையும். நட்பு வட்டம் விரிவடையும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உயர்வு பெறும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**கன்னி**
சுறுசுறுப்பாக செயல்பட்டு தேங்கிக் கிடந்த வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளின் புது முயற்சிகளை வரவேற்பீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகள் தேடி வரும். மனநிறைவு கிட்டும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். சில சூட்சுமங்களை கற்றுக் கொள்வீர்கள். நேர் மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**விருச்சிகம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்களை கூட பல முறை போராடி முடிப்பீர்கள். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். சகோதரர் வகையில் சங்கடங்கள் வரும். தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும்.

**தனுசு**
வீரியத்தை விட காரியம் பெரிது என்பதை உணர்வீர்கள். ஆதரவு பெருகும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வரு வார்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**மகரம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். உங்கள் வேலைகளை சுறுசுறுப்பாக முடித்துக் காட்டுவீர்கள். புதிய திட்டங்கள் நிறைவேறும்.

**கும்பம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். அதிகாரியின் நம்பிக்கையை பெறுவீர்கள். சாதிக்கும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால், மறதியால் பிரச்னை வந்து நீங்கும். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. தர்மசங்கடத்தை சமாளிக்கும் நாள்.

# பிரதமர் பேசியதன் பின்னணியை முதல்வர் புரிந்து கொள்ளவில்லை

## அண்ணாமலை விளக்கம்

சென்னை, மே 23

ஒடிசா மாநிலத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதன் பின்னணியை முதல்வர் மு. க. ஸ்டாலின் புரிந்து கொள்ளவில்லை என தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார். இது தொடர்பாக அவர்வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு,

பொய் சொல்வதையே முழு நேர வேலையாக வைத்துள்ள முதல்வர் மு. க. ஸ்டாலின், ஒடிசா தேர்தல் பிரசாரத்தில் தமிழர்களை அவமதித்து பிரதமர் பேசியதாக மற்றொரு பொய்யை சொல்லியிருக்கிறார்.



அந்தந்த மாநிலத்தின் அரசியல் தன்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். புரி ஜெகந்நாதர் கோவில் கருவூலத்தின் சாவி காணாமல் போய்விட்டது. அதற்குப் பொறுப்பு யார்? சொல்லப் போனால் அங்கு முதல்வரே வி. கே. பாண்டியன் தானே. இதை முதல்வர் புரிந்து கொள்ள வேண்டும். தமிழகத்தில் மண்ணின் மைந்தர் என பேசும் நிலையில், ஒடிசாவில் மட்டும் தனி நியாயமா?. இதில் பிரதமர் பேசியது எப்படி தவறாகும்?

பிரதமருக்கு தமிழர்கள் மீது அளவற்ற அன்பு, மதிப்பு இருக்கிறது. அதற்காக தமிழர்களை அனைத்து மாநிலங்களுக்கும் கொண்டு சென்று முதல்வராக்க முடியுமா?

எனவே, முதல்வர் பொய் கூறுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். பிரதமர் மீது பழி சுமத்துவது கண்டிக்கத்தக்கது- என்றார். (எ)

# பொலிஸ் நிலையம் செல்லும் பொதுமக்களுக்கு உதவ முடிவு

## தமிழக வெற்றிக் கழகம் புதிய திட்டம்

சென்னை, மே 23

பொலிஸ் நிலையம் செல்லும் பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் இரண்டு சட்டத்தரணிகளை நியமிக்கும் நடவடிக்கையில் தமிழக வெற்றிக் கழகம் ஈடுபட்டுள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை நடிகர் விஜய் தொடங்கினார்.

மேலும், கட்சிக்கு புதிய உறுப்பினர்களை ஒன்லைன் செயலி மூலம் இணைக்கும் பணியும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. தற்போது உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒரு கோடியை நெருங்கி வருகிறது. இந்த நிலையில், பொலிஸ் நிலையம் செல்லும் பொதுமக்களுக்கு உதவுவதற்கான பணிகளிலும்



தமிழக வெற்றிக் கழகம் ஈடுபட்டுள்ளது.

இதன்படி, மாவட்டந்தோறும் 10 சிறந்த சட்டத்தரணிகளைத் தெரிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனடிப்படையில் சென்னை உள்ளிட்ட சில மாவட்டங்களுக்கான சட்டத்தரணிகளை நியமிக்கும் பணிகளும் நிறைவடைந்துவிட்டன.

இதைத் தொடர்ந்து ஒவ்வொரு பொலிஸ் நிலையத்துக்கும் இரண்டு சட்டத்தரணிகள் வீதம் ஒரு வார காலத்துக்குள் நியமிக்கப்படவுள்ளனர்.

அவர்கள் கட்சியின் தலைவர் விஜயை சந்தித்த பிறகு, அதிகாரபூர்வமாக சட்டத்தரணிகள் பட்டியல் வெளியிடப்படும். சட்ட நடவடிக்கைகள் அறியாதோரும், சட்டத்தரணிகளை அணுக முடியாத ஏழை மக்களும் தாராளமாக தமிழக வெற்றிக் கழகத்தை அணுகலாம்.

அவர்களுக்கு எந்த வித கட்டணமுமின்றி சட்ட உதவிகள், பொலிஸ் நிலைய நடைமுறைகள் போன்றவற்றை செய்து கொடுக்க கட்சித் தலைவர் அறிவுறுத்தியுள்ளார். முழு வீச்சில் பணிகள் நடைபெற்று வருகின்றன. (எ)

# உலக பரா தடகள சம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்றார் தமிழக வீரர் மாரியப்பன்

## முதல்வர் வாழ்த்து

சென்னை, மே 23

நடப்பு உலக பரா தடகள சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் ஆடவருக்கான உயரம் தாண்டுதலில் தமிழக வீரர் மாரியப்பன் தங்கம் வென்றுள்ளார். உலக பரா தடகள சம்பியன்ஷிப் அரங்கில் அவர் வென்றுள்ள முதல் தங்கம் இது. இந்த தொடரில் இதுவரை இந்தியா மொத்தம் நான்கு தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.

ஜப்பான் நாட்டிலுள்ள கோபே நகரில் நடைபெற்று வரும் 2024 பரா தடகள விளையாட்டுப் போட்டிகளில் செவ்வாய்க்கிழமை உயரம் தாண்டுதல் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் பங்கேற்ற தமிழகத்தின் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தடகள விளை[illegible]




மீற்றர் உயரம் தாண்டி மாபெரும் சாதனை படைத்து தங்கப் பதக்கம் வென்றுள்ளார் எனும் செய்தி அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்திய நாட்டுக்கும், தமிழகத்துக்கும் மகத்தான பெருமையைத் தேடித்தந்துள்ள மாரியப்பனுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து மகிழ்கிறேன் என முதல்வர் மு. க. ஸ்டாலின் தனது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா வழங்கிய சோலர்களை இன்னும் பொருத்த முடியவில்லை!

## வருத்தப்படுகிறார் பிரதமர் தினேஷ்

கொழும்பு, மே. 23

**இலங்கையின் விகாரைகளில் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடிக்கு நிவாரணமாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சோலார் பனல்களை வழங்கியுள்ள போதிலும், அவற்றை இன்னும் நிறுவ முடியவில்லை எனவும், ஒரு நாடு என்ற வகையில் எமது தோல்வியை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.**



அரசாங்கம் மற்றும் அதிகாரத்துவ நடைமுறைகளில் நிலவும் பலவீனங்களினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதே நாம் எதிர்கொள்ளும் சவாலாகும் எனவும் அவர் கூறினார்.

பூஜாபிட்டிய, திவானவத்த ஸ்ரீ போதிருக்கராம விகாரையில் எட்டு மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 34 அடி உயர மைத்ரேய போதிசத்துவர் சிலை திறப்பு விழாவில் கலந்து கொண்ட பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.குணதிலக ராஜபக்ஷ மற்றும் அக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் நிதி நன்கொடையில் இதன் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதமர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் 10 வீத பாடசாலைகள் கூட சோலர் பனல்களை பொருத்தவில்லை. பொருளாதார நெருக்கடி காரணமாகச் சர்வதேச பரிவர்த்தனைகள் வீழ்ச்சியடைந்த யுகம் முடிவுக்கு வருகிறது.

ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளினால் மலையகத்தில் விகாரைகளுக்குச் சொந்தமான பதின்மூன்று இலட்சம் ஏக்கர் காணி இழக்கப்பட்டுள்ளது.

யார் ஆட்சியைக் கைப்பற்றினாலும் நாங்கள் மிகவும் கடினமான காலகட்டத்தை எதிர் நோக்கி வருகிறோம்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் எமது நாட்டை பலவந்தமாக அடக்கினார்கள் அதனால் அடையாளம் அழிக்கப்பட்டு எமது நாட்டை அன்று எமது கிராமியத் தலைவர்களும் மலையகத் தலைவர்களும் ஆரம்பித்த மாபெரும் போராட்டத்தினால் எமது நாடு சுதந்திரப் பயணத்தைத் தொடர முடிந்தது.

இன்று வாழும் தலைமுறைக்கும் எதிர்காலத்தில் வாழும் தலைமுறைக்கும் புத்த தர்மத்தைப் பற்றிய ஆழமான புரிதலை அடையக்கூடிய வழிகாட்டுதல் தேவை. புத்தரின் தர்மத்தை உலகிற்கு எடுத்துச் செல்லவும், அதைப் புரிந்து கொண்டு செயல்படவும் வழிகாட்டி தேவை. பௌத்தத்தின் ஆழமான ஆசீர்வாதங்களுடன் வாழ்ந்த ஒரு தலைமுறை எமது கிராமங்களில் இருந்தது.

உணவு கொண்டுவர ஹெலிகாப்டர்களுக்காக அவர்கள் காத்திருக்கவில்லை. கிராமத்தில் விவசாயம் செய்ததை சேகரித்து வண்டியில் ஏற்றி பொருளாதாரம் கண்டார். இது பௌத்தத்தின் உன்னத பரிசு. அது நிறுவப்பட்டது, புத்த தர்மத்தின் அடிப்படையில் மனித சமுதாயம் கட்டப்பட்டது. உன்னத நற்பண்புகளால் பிறந்த நாகரீகத்திலிருந்து நம் தேசம் இப்படித்தான் கட்டப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நமது நாடு கடினமான சூழ்நிலையில் உள்ளது. யார் ஆட்சியைக் கைப்பற்றினாலும் நாங்கள் மிகவும் கடினமான காலகட்டத்தை எதிர்நோக்கி வருகிறோம். உலகமும் அப்படித்தான். வல்லரசுகள் கூட வாழத் தெரியாத நிலையை இன்று உலகம் அடைந்துள்ளது.

அன்றைய சவால்களை கடந்து சென்ற மாவீரர்களினால் ஒரு நாடு என்ற அடையாளத்தை பேணவும் சிங்கள பௌத்தத்தை ஒன்றிணைந்த தேசத்தில் பாதுகாக்கவும் முடிந்தது. இன்று, அதையெல்லாம் பாதுகாத்துக் கொண்டு பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான சவாலை நாம் சமாளிக்க வேண்டும்-என்றார். (அ)

# பண்பாட்டு பன்மைத்துவத்தை வலியுறுத்தும் சிறப்பு ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மே. 23

பண்பாட்டு பன்மைத்துவத்தை (Cultural Diversity) வலியுறுத்தும் வகையில் அமைந்த சிறப்பு ஒன்று கூடல் நிகழ்வு நேற்று புதன்கிழமை காலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம் பெற்றது.


ஆரம்ப கல்வி பயிற்சிநெறி ஆசிரிய மாணவி ஜெயந்தகுமார் சுலோசனாதேவி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல் துறை முதுநிலை விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன் சிறப்புரை ஆற்றினார்.

ஆசிரிய மாணவர்களான சி. யனிஸ்டன் , இ. தேவமணி ஆகியோரும் ஆசிரிய மாணவர்கள் சார்பில் உரையாற்றினர்.

கலாசாலை அதிபர் ச. லலீசன் நிறைவுரை ஆற்றினார். விரிவுரையாளர் வேல். நந்தகுமார் சிறப்புரையாளருக்கான அறிமுகவுரையை ஆற்றினார்.

இலங்கையில் பண்பாட்டு பன்மைதுவத்தை குறிக்கும் வகையில் ஆரம்ப கல்வி ஆசிரிய பயிலுநர்களால் தயாரிக்கப்பட்ட காணொலியும் வெளியிடப்பட்டது. சிறப்புரையாற்றிய இ. இராஜேஸ்கண்ணன் தான் எழுதிய ஒரு தொகுதி நூல்களை கலாசாலை நூலகத்திற்குக் கையளித்தார். (அ)





# சகோதரி வீட்டுக்கு சென்ற ஒருவர் வெட்டிக் கொலை!

கொழும்பு, மே. 23

மொறொந்துடுவ, பொல்ஹேன பகுதியில் கூரிய ஆயுதங்களால் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளதாக மொறொந்துடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரகம பிரதேசத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபருக்கும் அவரது மைத்துநருக்கும் இடையிலான வாய்த்தர்க்கம் நீண்டதில் இருவருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் சந்தேக நபரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் மேலும் சிலருடன் பொல்ஹேன பிரதேசத்தில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு சென்றிருந்த போது இந்த தகராறு ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மொரந்துடுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தென் கொரிய அதிகாரிகள் குழு சபாநாயகருடன் விசேட சந்திப்பு

கொழும்பு, மே. 23

தென் கொரிய ஊழல் எதிர்ப்பு மற்றும் சிவில் உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் உப தலைவர் உள்ளிட்ட குழுவினர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவைச் சந்தித்தனர்.



தென் கொரியாவின் ஊழல் எதிர்ப்பு மற்றும் சிவில் உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் உபதலைவரும் செயலாளர் நாயகமுமான சுங் சியுங்-யுன் தலைமையிலான உயர் அதிகாரிகள் அடங்கிய தூதுக்குழுவினர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கடந்த வருடம் இலங்கையில் நிறைவேற்றப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சட்டம் மிகவும் பலம் வாய்ந்த ஒரு சட்டமாகும் என தென் கொரியாவின் ஊழல் எதிர்ப்பு மற்றும் சிவில் உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் உபதலைவர் சுங் சியுங்-யுன் தெரிவித்தார்.

அத்துடன், இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கு தென் கொரியாவில் நடைமுறைப்படுத்தப்படும் பொது நிறுவங்களுக்கான ஒருமைப்பாடு மதிப்பீட்டு முறைமையை இலங்கையிலும் அறிமுகப்படுத்துவதற்கு ஆதரவளிக்கத் தயாராக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# பாணில் கண்ணாடித்துண்டு; விசாரணைகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மே. 23

யாழ்ப்பாணத்தில் பாண் ஒன்றுக்குள் கண்ணாடித் துண்டுகள் காணப்பட்டமையை அடுத்து, பொதுச் சுகாதார பரிசோதகரிடம் முறையிடப்பட்டுள்ளது.

மருதனார்மடம் பகுதியில் உள்ள கடையொன்றில் நேற்று முன்தினம் ஒருவர் பாண் வாங்கி அதனை வீட்டில் சாப்பிட முனைந்தபோது, பாணினுள் உடைந்த போத்தலின் கண்ணாடித் துண்டுகள் காணப்பட்டன.

அது தொடர்பில் அப்பகுதி சுகாதார பரிசோதகருக்கு அறி[illegible] முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் குறித்த கடைக்கு சுன்னாகம் பகுதியில் உள்ள பிரபல வெதுப்பகம் ஒன்றே பாண் விநியோகம் செய்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து குறித்த வெதுப்பகத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் பொதுச் சுகாதார பரிசோதகர் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை ஊழியர் சங்கத்தினர் போராட்டம்

## சம்பள உயர்வு வழங்குமாறு கோரி

யாழ்ப்பாணம், மே. 23


சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவரும் யாழ். பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தினரால் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக வளாகத்திலிருந்து ஊர்வலமாக வந்த பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள், பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



"ஊழியரின் பொருளாதார நிலைமையை கருத்திற்கொள், எம்.சி.ஏ கொடுப்பனவை அதிகரி, கல்விசாரா ஊழியர்களை மாற்றான் வீட்டு பிள்ளையாக் காதே போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

தொழிற்சங்க கூட்டுக்குழுவினருடன் இணைந்து ஜனநாயக ஊழியர் சங்கத்தினர் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். (அ)



# ஈரான் தூதரகத்துக்கு சென்று ஜனாதிபதி ரணில் இரங்கல்

கொழும்பு, மே. 23

கொழும்பில் உள்ள ஈரான் தூதரகத்திற்கு நேற்று புதன்கிழமை காலை சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் திடீர் மரணத்திற்கு தனது இரங்கலைத் தெரிவித்தார்.

தூதரகத்திற்கு சென்ற ஜனாதிபதியை, இலங்கைக்கான ஈரான் தூதுவர் கலாநிதி அலிரீஸா டெல்கோஷ் உள்ளிட்ட பணிக்குழாம் வரவேற்றது.

ஈரான் ஜனாதிபதியின் மறைவு குறித்து ஈரான் தூதுவர் உள்ளிட்டோருடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டிருந்த குறிப்பேட்டில் இரங்கல் குறிப்பை பதிவிட்ட பின்னர், ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் திடீர் மரணத்திற்கு ஈரான் அரசாங்கத்திற்கும் அந்நாட்டு மக்களுக்கும் தனதும், இலங்கை அரசாங்கத்தினதும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார். (அ)

# கல்விச் சீர்திருத்தங்கள் எதிர்காலத்தில் நடக்கும்!

கொழும்பு, மே. 23

எதிர்காலத்தில் மாணவர்களை நிபுணத்துவம் மிக்கவர்களாக மாற்றுவதற்கான கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சமூக வலுவூட்டலுக்காக கல்வி முறையில் மாற்றம் வர வேண்டும். அதன்படி, கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், மதம், மொழி போன்ற பாடங்களில் சித்தி பெறாமை, பரீட்சையில் சித்தி பெறாததாகக் கருதக் கூடாது.

எனவே, க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பாடத்திட்டத்தில் திறன் விருத்தி மற்றும் தொழிற்கல்வி பாடத்தை உள்ளடக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படி, இந்தத் தீர்மானத்தை அடுத்த ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கிணங்க எதிர்காலத்தில் ஒரு முழுமையான நிபுணத்துவம் மிக்கவர்களை உருவாக்குவதற்குத் தேவையான கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். மேலும், சமூகத்தை வலுப்படுத்த நிலம் ஒரு முக்கிய காரணியாகும். எனவே, பயிர்ச்செய்கைக்கு ஏற்ற, ஆனால் இதுவரை பயிரிடப்படாத நிலத்தைப் பயன்படுத்தும் வகையில் புதிய சட்டங்களை கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் முழு நாட்டையும் வலுவூட்ட அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அதற்காக, அரச மற்றும் தனியார் துறையினர் மட்டுமின்றி அனைத்து சுயதொழில் செய்பவர்களுக்கும் பங்களிப்பு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கின்றோம்.

அதேபோல், ஒரு தொழில் முயற்சியாளர்களைக் கொண்ட நாட்டை உருவாக்க நாமும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அதனுடன், அனைவரும் தொழில் கல்வியையும் பெற வேண்டும். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் முன்னேறுவதற்கும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்-என்றார். (அ)

# பெண் உயிரிழந்த விபத்து வழக்கிலிருந்து நோயாளர் காவு வண்டி சாரதி விடுதலை!

கொழும்பு, மே. 23

ஆபத்தான கொரோனா நோயாளியை வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்றபோது, நோயாளர் காவு வண்டியில் மோதி பெண் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சுவசெரிய அம்புலன்ஸ் சேவையின் சாரதியை குருநாகல் மேலதிக நீதவான் நுவன் கௌசல்யா விடுதலை செய்து உத்தரவிட்டார்.

நோயாளர் காவு வண்டி சாரதிகளுக்கு மோட்டார் போக்குவரத்துச் சட்டம் பொருந்தாது, சந்தேகத்திற்கிடமான நோயாளர் காவு வண்டி சாரதி மீது நீதிமன்றில் வழக்குத் தொடர முடியாது என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளதால் சாரதி விடுவிக்கப்படுவார் என நீதிபதி தெரிவித்தார்.

சந்தேகத்திற்குரிய நோயாளர் காவு வண்டி சாரதி சார்பில் நீதிமன்றில் சாட்சியமளித்த சட்டத்தரணி கே. துனுசிங்க, கொரோனா அச்சுறுத்தல் தீவிரமாக இருந்த காலப்பகுதியில் 2021 ஜனவரி 19ஆம் திகதி கொரோனா தொற்றுக்குள்ளான நோயாளி மிகவும் ஆபத்தான நிலையில் இருந்ததாக தெரிவித்தார். அம்பன்பொல வைத்தியசாலையில் இருந்து குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு சந்தேகநபர் ஓட்டிச் சென்ற நோயாளர் காவு வண்டியில் கொண்டு செல்லப்பட்டார்.

கொரோனா நோயாளியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக சந்தேகநபர் தனது நோயாளர் காவு வண்டியை அதிவேகமாக ஓட்டிச் சென்றதாகவும், அவ்வாறு சென்ற போது குருநாகல்-புத்தளம் வீதியில் பெண் ஒருவர் வாகனத்தில் மோதியதாகவும் பின்னர் அவர் உயிரிழந்ததாகவும் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

சந்தேகநபர் வேண்டுமென்றே விபத்தை ஏற்படுத்தவில்லை எனத் தெரிவித்த சட்டத்தரணி, விபத்து தொடர்பில் தனது கட்சிக்காரருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு எவ்வித ஏற்பாடும் இல்லை எனவும் தெரிவித்தார்.

உயிருக்கு போராடும் நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் நோயாளர்காவு வண்டி சாரதிக்கு மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் விதிகள் பொருந்தாது என்று வலியுறுத்திய சட்டத்தரணி, நோயாளர்காவு வண்டி சாரதிக்கு அதற்கான பாதுகாப்பு இருப்பதாகவும் கூறினார். (அ)

# பகிரங்க நிதிசார் முகாமைத்துவம், பொருளாதார நிலைமாற்ற சட்டமூலங்கள் சபையில் சமர்ப்பிப்பு

கொழும்பு, மே. 23

பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டமூலம் மற்றும் பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலம் என்பன முதலாம் வாசிப்புக்காக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான பிரசன்ன ரணதுங்க சட்டமூலங்களை சபைக்கு சமர்ப்பித்தார்.

**பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டமூலம்**

சிறந்த பேரினப் பொருளாதார முகாமைத்துவத்துக்காக நிதிக் கொள்கையை மேம்படுத்தும் நோக்கில் பகிரங்க நிதிசார் முகாமைத்துவ கட்டமைப்பில் பகிரங்க நிதிசார் பொறுப்புக்கூறல் மேற்பார்வை செய்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் என்பன வற்றை வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும், நிதிசார் முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட நிறுவனம் சார் பொறுப்புக்களை தெளிவுப்படுத்துவதற்கும், வரவு செலவுத் திட்ட முகாமைத்துவத்தினை வலுப்படுத்துவதற்கும், நிதிக் கொள்கை மற்றும் நிறைவேற்றத்தின் பொதுமக்கள் ஆராய்வுகளை வசதிப்படுத்துவதற்கும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் 2 இன் 8 ஆம் மற்றும் 14 ஆம் பிரிவுகளை நீக்குவதற்கும், 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தினை நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்யும் வகையில் இந்த சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

**பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலம்**

பொருளாதார நிலைமாற்றம் மீதான தேசியக் கொள்கைகளை ஏற்பாடு செய்வதற்கும், இலங்கை பொருளாதார ஆணைக்குழு, இலங்கை முதலீட்டு வலயங்கள், சர்வதேச வியாபாரத்துக்கான அலுவலகம், தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழு, இலங்கை பொருளாதார மற்றும் சர்வதேச வியாபாரத்துக்கான நிறுவகம் ஆகியவற்றை ஸ்தாபிப்பதற்கும், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க,இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தை நீக்குவதற்கும் அவற்றோடு தொடர்புப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்யும் வகையில் இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. (அ)

# பண வீக்கம் உயர்வு

கொழும்பு, மே 23

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த ஏப்ரல் மாதத்தில் அதிகரித்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று வெளியிட்ட புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதத்தில் 2.5 சதவீதமாக காணப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 2.7 சதவீதமாக அதிகரித்துள்ளது.

மார்ச் மற்றும் பெப்ரவரி மாதங்களில் தொடர்ந்தும் 5 சதவீதமாகக் காணப்பட்ட உணவு பணவீக்கம், ஏப்ரல் மாதத்தில் 3.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

மார்ச் மாதத்தில் 0.7 சதவீதமாக பதிவாகியிருந்த உணவல்லாப் பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 2.3 சதவீதமாக அதிகரித்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசார தேரருக்கு மன்னிப்பு வழங்குக!

## இந்து சம்மேளனமும் கோரிக்கை

கொழும்பு, மே. 23

**பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குமாறு கோரி இலங்கை இந்து சம்மேளனமும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது**

2016 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின்போது இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவத்தில் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து, இன, மத நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தியமை உள்ளிட்ட இரண்டு குற்றச்சாட்டுகள் தொடர்பாக குற்றவாளியாக காணப்பட்டதை அடுத்து, கடந்த மார்ச் 28 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் குறித்த தேரருக்கு நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

இந்த நிலையில், கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குமாறு கோரி மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் எழுதியுள்ளனர். சமூகத்தில் தீவிரவாதசக்திகளின் செயற்பாடுகள் குறித்து எச்சரிக்கும் நடவடிக்கையில் ஞானசார தேரர் ஈடுபட்டதாகவும் பாதுகாப்பு படையினருக்கும் ஆதரவளித்தாகவும் மகாநாயக்க தேரர்கள் அவர்களின் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அத்தோடு, சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ள வணக்கத்துக்குரிய கலகொட அத்தே ஞானசார தேரர் ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என இலங்கை இந்து சம்மேளனமும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வீட்டில் தனிமையில் இருந்தவர் கட்டையால் தாக்கிக் கொலை!

கொழும்பு, மே. 23

வீட்டில் தனியாக இருந்த ஒருவர் கட்டையால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் முதியவரின் சடலம் அவருடைய வீட்டில் மீட்கப்பட்டுள்ளது .

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது இனந்தெரியாத நபர் ஒருவர் இவருடைய வீட்டில் புகுந்து அவரை கட்டையால் தாக்கிக் கொலை செய்ததாகத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் கொழும்பு 13, ஜம்பட்டா வீதியை சேர்ந்த 67 வயதுடையவர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலை குறைப்பு

கொழும்பு, மே. 23

வெசாக் பண்டிகையை முன்னிட்டு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விலைக் குறைப்பானது நேற்று புதன்கிழமை முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு கிலோ நெத்தலி கருவாடு 950 ரூபாவாகவும், ஒரு கிலோ இந்தியப் பெரிய வெங்காயம் 250 ரூபாவாகவும், ஒரு கிலோ நிலக்கடலை 450 ரூபாவாகவும், ஒரு கிலோ சீனி 275 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

(அ)

# திருகோணமலை-மட்டக்களப்பு ரயில் போக்குவரத்து பாதிப்பு

கொழும்பு, மே. 23

பொத்துஹெரவில் ரயிலொன்று தடம் புரண்டதால், திருகோணமலை - மட்டக்களப்பு இடையிலான ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

குருநாகலில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த ரயிலொன்று நேற்றுக் காலை 6.15 மணி அளவில் தடம்புரண்டதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எம்.ஜே.இந்திபொலகே தெரிவித்தார்.

தடம் புரண்ட ரயிலை தண்டவாளத்தில் நிறுத்துவதற்காக குழுவொன்று அனுப்பிவைக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இதனிடையே, பாலாவி மற்றும் முந்தல் ரயில் நிலையங்களுக்கிடையே ரயில் மார்க்கம் நீரில் மூழ்கியுள்ளமையால் குறித்த மார்க்கத்தினூடான போக்குவரத்து பங்கதெனிய வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

(அ)

# மீனவர் மறு அறிவித்தல்வரை கடலுக்குச் செல்லவேண்டாம்

கொழும்பு, மே. 23

மீனவர்கள், கடற்படையினரை மறு அறிவித்தல் வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களம் அறிவித்துள்ளது.

மன்னார் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடல் பிராந்தியங்களில் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். சில இடங்களில் பலத்த மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டை சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டை சூழ உள்ள கடல் பிராந்தியங்களில் தென்மேற்குத் திசையில் இருந்து காற்று வீசும்.

மன்னார் தொடக்கம் கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 40-50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும். சில சமயங்களில் மணித்தியாலத்திற்கு 60-70 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்தும் காணப்படும்.

நாட்டை சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 25-35கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும். சில சமயங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 50 கிலோமீற்றர் ஆக அதிகரித்தும் காணப்படும்.

எனவே, மன்னார் தொடக்கம் கொழும்பு வரையான கடல் பிராந்தியங்கள் அடிக்கடி கொந்தளிப்பாகக் காணப்படுவதனால் இக் கடல் பிராந்தியங்களுக்கு மீனவர்கள், கடற்படையினர் மறு அறிவித்தல் வரை செல்ல வேண்டாம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கல்பிட்டி தொடக்கம் கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் கடல் அலையானது 2.5 - 3.0 மீற்றர் உயரத்திற்கு மேலெழக்கூடும். இது தரைப் பிரதேசத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தாது என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

# நன்மைகளை பொதுமக்களுக்கு வழங்க மின்சக்தி அமைச்சு முன்வரவேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கொழும்பு, மே. 23

நாட்டில் நீர்மின் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில் அதன் நன்மைகளை பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுக்க மின்சக்தி அமைச்சு முன்வர வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றில் நேற்று கோரிக்கை முன்வைத்தார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தொடர்ச்சியாக நிலவும் மழையுடனான வானிலை காரணமாக நீர்மின்னுற்பத்தி அதிகரித்துள்ளது. குறிப்பாக காசல்ட்ரீ, மவுசாக்கலை, கொத்மலை, விக்டோரியா, ரந்தெனிகல, சமனலவெல ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக அதிகரித்துள்ளது.

இதனால் நீர்மின் உற்பத்தி நூற்றுக்கு 31 வீதமாக அதிகரித்துள்ளது. பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மின்கட்டணத்தினை குறைக்குமாறு 2 தடவைகள் மின்சக்தி அமைச்சிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளதாக அறியக்கிடைத்துள்ளது. மின்சக்தி அமைச்சும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவும் இணைந்து ஒரு தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டும்.

அதாவது நாட்டில் நீர்மின் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில் அதன்நன்மைகளை பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். மேலும், மின் அலகொன்றுக்கு அறவிடப்படும் கட்டணத்தினை உடனடியாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரிடம் கோரிக்கையை முன்வைக்கின்றேன்-என்றார்.

(அ)

# இணுவில் மக்லியோட் வைத்தியசாலைக்கு சர்வதேச விருது வழங்கப்பட்டு கௌரவம்

கொழும்பு, மே. 23

கருவள சிகிச்சையை சிறந்த முறையில் இலங்கையில் முன்னெடுக்கும் வைத்தியசாலையாக இணுவில் மக்லியோட் வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டு அதற்கு சர்வதேச விருது வழங்கி வைக்கப்படுள்ளது.

"BWIO" என்ற அமெரிக்காவினை சேர்ந்த அமைப்பினால் இந்த விருது வழங்கிவைக்கப்பட்டது.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் கருவள சிகிச்சையினை (ஐ.வி.எவ்) சிறந்த முறையில் முன்னெடுக்கும் வைத்தியசாலையாக குறித்த வைத்தியசாலை 10 சர்வதேச நாடுகளினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது ஓர் சிறப்பம்சமாகும்.

இவ் விருது வழங்கும் விழாவில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள்,அரசியல் பிராமுகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



மேலும், குறித்த வைத்தியசாலை 126 வருடம் பழமை வாய்ந்த வைத்திய சாலையாக காணப்படுகிறது. தற்போது குறித்த வைத்தியசாலையை குழந்தை சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் பா.சயந்தன் நிர்வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒரே கருவில் நான்கு குழந்தைகளை இயற்கை முறையில் பெற்ற பெண்!

## மட்டக்களப்பு மருத்துவ வரலாற்றில் சாதனை

மட்டக்களப்பு, மே. 23

மருத்துவ வரலாற்றில் ஒரு கருவில் நான்கு குழந்தைகளை ஆரோக்கியமான முறையில் தாய் ஒருவர் பிரசவித்துள்ள சம்பவம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்த கரிகரன் கிருஸ்ணவேணி என்னும் தாயே இந்த குழந்தைகளை பிரசவித்துள்ளார்.



மருத்துவத்துறையின் வரலாற்றில் இயற்கை முறையில் இவ்வாறு கருத்தரிப்பதானது அரிதான விடயமாகவே காணப்படுவதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் சரவணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்தும் வகையான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று காலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் க.கலாரஞ்சினி, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் சரவணன், குழந்தை நல வைத்திய நிபுணர் ரி.மதன் ஆகியோர் இங்கு கருத்து தெரிவித்தனர்.

இதன்போது சுகப் பிரசவத்தில் பிறந்த குழந்தைகள் கொண்டுவரப்பட்டு ஊடகவியலாளர்களுக்கு காண்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி பெ.மைதிலி உட்பட வைத்தியர்கள், தாதியர்கள் கலந்துகொண்டனர்.

இவ்வாறு ஒரு சூலில் நான்கு குழந்தைகள் பிறக்கும் செயற்பாடானது 5 இலட்சத்து 70ஆயிரம் அம்மாக்களிலேயே இடம்பெறுவதாகவும் அதுவும் செயற்கை முறையிலான கருத்தரிப்பு மூலமே அவ்வாறான விடயமும் சாத்தியமாக காணப்படும் நிலையில் இயற்கையாக கருத்தரித்து சுகப்பிரசவமாக நான்கு குழந்தைகளை இந்த தாய் பிரசவித்தானது மருத்துவத்துறையில் மிகவும் அரிதான விடயமாக பார்க்கப்படுவதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் சரவணன் தெரிவித்தார்.

பிறந்த நான்கு குழந்தைகளும் மிகவும் சுகதேக ஆரோக்கியத்துடன் உள்ளதாகவும் இவ்வாறான அரிதான பிறப்பாக கருதுவதாகவும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் க.கலாரஞ்சினி தெரிவித்தார். (அ)





# சமூக மட்ட பிரதிநிதிகளுக்கு உளசமூக பிரச்னைகளை குறைக்கும் செயலமர்வு

அம்பாறை, மே. 23

உளசமூக பிரச்னைகளை குறைப்பதற்கான உளவியல் உளவளத்துணை செயலமர்வு நேற்று சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் உள்ள பெண்கள் சார்ந்த சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு இச் செயலமர்வு நடத்தப்பட்டது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சமூக மட்டத்தில் இடம்பெறும் உள ரீதியான பிரச்னைகளுக்கு பெண்களை மையப்படுத்தி அதனை நிவர்த்தி செய்வது சம்மந்தமாகவும், சமகால உளவள பிரச்னைகள் சம்பந்தமாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம். ஜெமில், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.எல்.ஐ கபீர், சமூக சேவைப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# கோறளைப்பற்று பிரதேச சிறுவர் சபையின் கூட்டம்



மட்டக்களப்பு, மே. 23

மட்டக்களப்பு கோறளைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சிறுவர் சபையின் இரண்டாம் காலாண்டிற்கான கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டம் கோறளைப்பற்று பிரதேச செயலக சிறுவர் சபையின் தலைவர் வி.அரோஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் செறின் தன்னார்வ தொண்டு நிறவனத்தினால் கிழக்கு மாகாண ரீதியில் மகளீர் பிரிவினருக்கென நடத்தப்பட்ட கிரிக்கட் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றி மாகாண ரீதியில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டவர்கள் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட வெற்றிக் கேடயத்தை பிரதேசசெயலாளரிடம் கையளித்து பெருமையடைந்தனர்.

இதேபோன்று மாவட்ட ரீதியில் 2 ஆம் இடத்தை பெற்றுக்கொண்ட ஆண்கள் பிரிவினரும் தங்களது வெற்றிக் கோப்பையை கையளித்தனர். இவர்களது சாதனையை பிரதேச செயலாளர் பாராட்டியதுடன் அவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினார். அத்துடன் பெண்களுக்கான காலணிகளும் வழங்கப்பட்டன.

# ஊழியர் போராட்டத்தை மலினமாக்கும் சக்திகள் ஒதுங்கிக்கொள்ளவேண்டும்!

## தென்கிழக்கு பல்கலை ஊழியர் சங்க தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் காட்டம்

அம்பாறை, மே. 23

நாங்கள் சொகுசு தேவைகளுக்காக போராடவில்லை. எங்களது போராட்டம் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயமான கோரிக்கைக்கான போராட்டம்.

21 நாட்களாக நாங்கள் போராடிவரும் இவ்வாறான சூழலில் சில பல்கலைக்கழகங்களில் உள்ள மனிதாபிமான மற்ற சிலர் எங்களது நியாயமான கோரிக்கைகளை மலினப்படுத்தும் வகையில் சூசகமாக சில வேலைத்திட்டங்களை செய்ய முனைகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் எங்களுக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுகின்றன.

இவ்வாறானவர்கள் எங்களது போராட்டத்தின் நோக்கத்தை உணர்ந்து அவர்கள் முன்னெடுக்கும் திட்டங்களில் இருந்து ஒதுங்கிக்கொள்ள வேண்டும். என்று தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற கவன வீர்ப்பு போராட்டத்தின்போதே அவர் இவாறு கூறினசர்.

இங்கு கருத்து தெரிவித்த ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகமது காமில்- பல்கலைக்கழக கட்டமைப்பில் பணியாற்றுபவர்கள் என்ற ரீதியில் கல்விசாரா ஊழியர்களாகிய நாங்கள் ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஏற்படும் அநீதிகளுக்காக குரல் கொடுத்துள்ளோம் இவ்வாறான நிலையில் சிலர் முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களை நாங்கள் கூட்டாக கண்டிக்கின்றோம். இவர்கள் எங்களது கஷ்ட்டங்களை உணர்ந்து எங்களுக்காக குரல் கொடுக்க முன்வரவேண்டும்- என்றார்.

இன்றைய போராட்டத்தின் போதும் வாக்களிக்கப்பட்ட 107 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு, உறுதியளித்த 25 வீத எம்.சி.ஏ கொடுப்பனவை வழங்கு என்பனபோன்ற பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வை தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இங்கு ஒற்றுமையே பலம், சமத்துவமே எம் தேவை, அரசாங்கமே கண்முளித்துப்பார், 8 வருட ஏமாற்றம் இன்னும் தொடருமா?, வேண்டாம் வேண்டாம் பாகுபாடு வேண்டாம், புத்திஜீவிகளை உருவாக்கும் அரச ஊழியர்களாகிய நாங்கள் நடுத்தெருவில் என்பன போன்ற கோசங்களும் எழுப்பப்பட்டன. (அ)

# மாணவனை காணவில்லை

திருமலை, மே. 23

திருகோணமலை மொறவெவ பொலிஸ் பிரிவிட்குட்பட்ட ரொட்டவெவ பகுதியிலுள்ள மசூட் அஸ்மட், 15 வயது மாணவனை காணவில்லை என மொரவெவ பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மாணவன் அரபு மத்ரசாவில் இருந்து கடந்த 10 திகதி வெள்ளிக்கிழமை ரொட்டவெவ கிராமத்துக்கு வருகை தந்திருந்திருந்தாரல் இந்த நிலையில் 16 திகதி வியாழக்கிழமை காணாமல் போயுள்ளதாகவும் 18 திகதி சனிக்கிழமை மாணவனின் தந்தை மொறவெவ பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

குறித்த சம்பவம் தொடர்பில் மொறவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹெலிகொப்டர் விபத்தில் ஜனாதிபதி பலி

# தளபாட சிக்கல்கள் காரணமாக ஈரானுக்கு உதவ முடியவில்லை!

## என்கிறார் அமெரிக்க அரசின் செய்தி தொடர்பாளர்

வாஷிங்டன், மே 23

**இப்ராஹிம் ரைசியின் கடந்த காலம் மாறிவிடாது. ஒரு நீதிபதியாகவும், ஈரானின் ஜனாதிபதியாகவும் அவரது கைகளில் இரத்தம் படிந்துள்ளது- இவ்வாறு சுட்டிக்காட்டிய அமெரிக்க அரசின் செய்தி தொடர்பாளர் மேத்யூ மில்லர், தளபாட சிக்கல்கள் காரணமாக ஈரானுக்கு உடனடியாக உதவி செய்ய முடியவில்லை என்றும் விளக்கமளித்தார்.**

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, வெளிவிவகார அமைச்சர் உசைன் உட்பட 9 பேர் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதில் பலியாகினர்.

இந்த விபத்து தொடர்பான விசாரணையை ஈரான் அரசு ஆரம்பித்துள்ளது. ஹெலிகொப்டர் விபத்து ஏற்பட்ட பகுதியில் மோசமான வானிலை நிலவியதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், ஹெலிகொப்டர் விபத்து தொடர்பான விசாரணையில் உதவுமாறு அமெரிக்காவிடம் ஈரான் அரசு கேட்டுக்கொண்டதாகவும், தளபாட சிக்கல்கள் காரணமாக தற்போது உதவி செய்ய முடியவில்லை எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்க அரசின் செய்தி தொடர்பாளர் மேத்யூ மில்லர் செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு,



"ஈரான் அரசு எங்களிடம் விசாரணைக்காக உதவி கோரியது. நாங்கள் உதவி செய்யத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தோம். இது போன்ற ஒரு சூழலில், எந்த நாட்டின் அரசாங்கத்துக்கும் நாங்கள் உதவி செய்வோம். ஆனால் தளபாடங்களைக் கொண்டு செல்வது உள்ளிட்ட காரணங்களால் தற்போது எங்களால் உதவி செய்ய முடியவில்லை.

ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக இரங்கல் தெரிவிக்கிறோம். அதே வேளை, இப்ராஹிம் ரைசியின் கடந்த காலம் மாறிவிடாது. ஒரு நீதிபதியாகவும், ஈரானின் ஜனாதிபதியாகவும் அவரது கைகளில் இரத்தம் படிந்துள்ளது. ஈரான் மீதான அமெரிக்காவின் அடிப்படை அணுகுமுறை மாறப்போவது இல்லை. ஈரான் மக்களின் மனித உரிமைகள், சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க நாங்கள் தொடர்ந்து ஆதரவளிப்போம்.

ஈரான் அரசு தனது விமானத்தை பயங்கரவாதிகளுக்கு உபகரணங்கள் கொண்டு செல்ல பயன்படுத்தியது. எனவே, ஈரான் அரசாங்கத்தின் மீதான அமெரிக்காவின் தடைகள் தொடர்ந்து செயல்பாட்டில் இருக்கும். மேலும், மோசமான வானிலை நிலவியதாக கூறப்படும் இடத்தில் 45 ஆண்டுகள் பழமையான ஹெலிகொப்டரை பயன்படுத்திய முடிவுக்கு ஈரான் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்." - என்றார். (எ)




# நடுவானில் பயங்கரமாக குலுங்கிய சிங்கப்பூர் எயர்லைன்ஸ் விமானம்!

## ஒருவர் பலி; 30 பேர் காயம்

பாங்கொக், மே 23

211 பயணிகள், 18 விமான ஊழியர்களுடன் லண்டனின் ஹீத்ரூ சர்வதேச விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூர் பயணித்துக் கொண்டிருந்த விமானம் நடுவானில் பயங்கரமாக குலுங்கியதில் பயணி ஒருவர் உயிரிழந்தார். 30 பேர் காயமடைந்தனர். இது விமான விபத்துகளில் மிகவும் அரிதானதாக அறியப்படுகிறது.

இது தொடர்பாக சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இது ஓர் அரிதான சம்பவம். லண்டனிலிருந்து சிங்கப்பூர் நோக்கி வந்துகொண்டிருந்த எங்கள் Boeing 777-300 நுசு ரக விமானம் SQ321 விமானம் வழியில் கடுமையாக குலுங்கியது. இதனால் விமானம் பாங்கொக் நகருக்கு திருப்பிவிடப்பட்டு அங்கே அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. செவ்வாய்க்கிழமை உள்ளூர் நேரப்படி பிற்பகல் 3. 45 மணிக்கு விமானம் பாங்கொக் விமான நிலையத்தில் தரையிறங்கியது.

அரிதான இந்த விபத்தில் பயணி ஒருவர் உயிரிழந்தார். 30 பயணிகள் காயமடைந்தனர். இதனை நாங்கள் உறுதி செய்கிறோம். இப்போதைக்கு விமானத்திலுள்ள மற்ற பயணிகள் விமான ஊழியர்களின் நலனை உறுதி செய்யும் பணிகளை மேற்கொண்டுள்ளோம். தாய்லாந்திலுள்ள உள்ளூர் அதிகாரிகளுடன் பயணிகளுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை செய்யும்படி கோரியுள்ளோம். மேலும், பாங்கொக் நகருக்கு உடனடியாக எங்களுடைய குழு ஒன்று அனுப்பிவைக்கப்படுகிறது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஈரான் ஜனாதிபதி உயிரிழப்பு எங்களுக்கு தொடர்பு இல்லை

## இஸ்ரேல் மறுப்பு

ஜெருசலேம், மே 23

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி ஹெலிகொப்டர் விபத்தில் பலியானதற்கும் தங்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை இஸ்ரேல் மறுத்துள்ளது.

இஸ்ரேல் இராணுவத்துக்கும், ஹமாஸ் தீவிரவாதிகளுக்கும் இடையே தீவிர போர் நடந்து வருகிறது. இதில் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு ஆயுத உதவி, நிதி உதவியை ஈரான் வழங்கி வருகிறது. இந்த போரின் எதிரொலியாக கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு இஸ்ரேல் மீது ஈரான் இராணுவம் ஏவுகணைகளை வீசியும், 300 ட்ரோன்கள் மூலம் குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தியது.

இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் இராணுவம், ஈரானின் அணு உலைகளுக்கு அருகே அதி நவீன ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. இந்தச் சூழலில், ஹெலிகொப்டர் விபத்தில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உயிரிழந்திருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

இதுகுறித்து இஸ்ரேலிய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறும்போது, ஈரானுக்கும் எங்களுக்கும் மோதல் இருப்பது உண்மைதான். ஆனால், ஹெலிகொப்டர் விபத்துக்கும், எங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று திட்டவட்டமாக மறுப்பு தெரிவித்தது. இதே வேளை, ஈரானின் தற்போதைய நிலவரத்தை மிக உன்னிப்பாக கண்காணித்து வருவதாக அமெரிக்க ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

# நெதன்யாகுவுக்கு பிடியாணை பிறப்பிக்க பெல்ஜியமும் ஆதரவு

ஆம்ஸ்டர்டாம், மே 23

நெதன்யாகு மற்றும் ஹமாஸ் தலைவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்க சர்வதேச நீதிமன்றத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முதன்மை சட்டத்தரணியான கரிம் கான், இஸ்ரேல் மற்றும் காஸா முனையில் மனித குலத்துக்கு எதிரான போர்க்குற்றங்கள் நடந்துள்ளதாகவும், அதற்கு காரணமான இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, பாதுகாப்புத்துறை அமைச்சர் யோவாவ் காலண்ட், ஹமாஸ் தலைவர்கள் யெஹ்யா சின்வார், முகமது தெயிப் மற்றும் இஸ்மாயில் ஹானியே ஆகியோருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்க வேண்டும் என்றும் சர்வதேச



குற்றவியல் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு பெஞ்சமின் நெதன்யாகு உள்ளிட்ட பல்வேறு இஸ்ரேலிய தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்ததோடு, இந்த நடவடிக்கையை யூத விரோதம் என்று விமர்சித்துள்ளனர். அதே போன்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் இதற்கு கண்டனம் வெளியிட்டுள்ளார். மேலும் இஸ்ரேலுக்குத் தங்களை தற்காத்துக் கொள்ளும் உரிமை உள்ளது என்று அவர் கூறினார்.

இந்த நிலையில் நெதன்யாகு மற்றும் ஹமாஸ் தலைவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்க சர்வதேச நீதிமன்றத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் சுதந்திரம் மற்றும் எந்தச் சூழலிலும் தண்டனை பெறாதவர்களுக்கு எதிரான போராட்டத்தை பிரான்ஸ் மதிக்கிறது என அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பெல்ஜியம் வெளிவிவகார அமைச்சர் ஹட்ஜா லாபிப் தனது "எக்ஸ்" தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "குற்றவாளிகள் யாராக இருந்தாலும், காஸாவில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக அவர்கள் மீது உயர்மட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும்" என்று பதிவிட்டுள்ளார். (எ)

# காற்றழுத்த தாழ்வுப்பகுதி வங்கக்கடலில் உருவானது


சென்னை,மே 23

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் கோடை வெயில் சுட்டெரித்து வந்தது. இதற்கிடையே கடந்த 4 ஆம் திகதி "அக்னி நட்சத்திரம்" எனப்படும் கத்திரி வெயிலும் தொடங்கியது. கத்திரி வெயில் தொடங்கிய பின்னர் வெயில் தாக்கம் அதிகரித்தது.

இதற்கிடையே கடந்த சில நாட்களாக தமிழக உள் மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களிலும் மிதமானது முதல் கனமழை பெய்து வருகிறது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் மழை பெய்தது. இதையடுத்து வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் காற்ற...



கும். இதனால் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பொருளாதார நிலைமை; நாட்டு மக்களுக்கு நம்பிக்கையில்லை

## ஆய்வு ஒன்றில் வெளியானது தகவல்

கொழும்பு, மே. 23

**இலங்கையின் பொருளாதார நிலைமையானது தவறான வழியில் செல்வதாக நாட்டு மக்கள் கருதுவதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.**

சுகாதாரக் கொள்கைக்கான மற்றும் சுயாதீனமான ஆராய்ச்சி நிறுவனமான இன்ஸ்ரிரியூட் போர் ஹெல்த் பொலிசி நிறுவனம் மேற்கொண்ட கருத்துக்கணிப்பில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இந்த கருத்துக்கணிப்பில் இலங்கை தவறான திசையில் செல்வதாக 75 சதவீத இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் ஏனைய நாட்டு மக்களின் நிலைப்பாடுகளை விட இலங்கை மக்களின் நிலைப்பாடு பாரிய அதிகரித்த போக்கை காட்டுவதாகவும் தெரியவந்துள்ளது.

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான இலங்கையின் போக்கு சரியான பாதையில் செல்வதாக 3 சதவீத கூட நம்பிக்கை வெளியிட இல்லை எனவும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பாரிய சாவல் ஏற்பட்டுள்ளதாகவும் இன்ஸ்ரிரியூட் போர் ஹெல்த் பொலிசி நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கை பாராளுமன்றத்தில் ஈரான் ஜனாதிபதிக்கு இரங்கல்!

கொழும்பு, மே. 23

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று புதன்கிழமை) பாராளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மறைந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நடவடிக்கைகளின் ஆரம்பத்தில், எதிர்க்கட்சித் தலைவர்சஜித் பிரேமதாச, மறைந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் பலர் சார்பாக தனது இரங்கலைத் தெரிவித்தார்.

இவர்கள் அனைவருக்கும் இஸ்லாத்தின் படி சொர்க்க வாசல் திறக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பின்னர் ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க அமைச்சர்கள் உட்பட அனைவரும் மறைந்த ஈரான் ஜனாதிபதி உள்ளிட்டோரை நினைவுகூர்ந்து ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வீதிக்கு வந்த காட்டு யானை



மன்னார், மே. 23

மன்னார்-மதவாச்சி பிரதான வீதி, முருங்கன் பகுதியில் காட்டு யானை ஒன்று நேற்று காலை திடீரென வீதிக்கு வந்தமையால் குறித்த வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

முருங்கன் பண்ணையின் பின் பகுதியூடாக வந்த குறித்த யானை பன்னையின் சுற்று வேலியை உடைத்துக் கொண்டு மன்னார்-முருகன் பிரதான வீதிக்கு வந்து சிறிது நேரத்தின் பின்னர் வீதியைக் கடந்தது.

இதனால் குறித்த வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த யானை காட்டுப் பகுதிக்குள் சென்றது.

கடந்த சில நாட்களாக மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் இரவு பகல் பாராது காட்டு யானையின் திடீர் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில் மக்களை அவதானமாக பயணிக்குமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 'நிதியியல் அறிவு வழிகாட்டி' மத்திய வங்கியால் வெளியீடு

கொழும்பு, மே. 23

பொதுமக்கள் மத்தியில் நிதியியல் அறிவை மேம்படுத்தல் மற்றும் நிதியியல் செயல்பாடுகளில் அனைவரையும் உள்வாக்குதல் ஆகியவற்றின் ஊடாக பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியினால் நிதியியல் அறிவு வழிகாட்டி வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டு மக்களிடையே நிதியியல் அறிவை மேம்படுத்துவதையும், நிதியியல் செயல்பாடுகளில் அனைவரையும் உள்வாங்குவதையும் இலக்காகக்கொண்டு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்டுள்ள நிதியியல் அறிவு வழிகாட்டி வெளியிடப்பட்டுள்ளது.

அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்தி மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றை அடைந்துகொள்வதற்கு நிதியியல் அறிவு அவசியம் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

அத்தோடு, நிதியியல் செயல்பாடுகளில் நாட்டுமக்கள் அனைவரையும் உள்வாங்குவதை முன்னிறுத்தி மத்திய வங்கி பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருவதாகவும் அவர் கூறினார்.

பொதுமக்கள் வைப்பு மற்றும் முதலீடு உள்ளிட்ட நிதிசார் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும், நிதிமோசடிகளில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும் நிதியியல் அறிவு பெரிதும் உதவும் என்பதுடன், இது நிதியியல் முறைமை மீதான மக்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், மக்கள் மத்தியில் நிதியியல் அறிவை மேம்படுத்துவதன் ஊடாக வறுமை மட்டத்தைக் குறைப்பதற்கும், அதன்மூலம் சமூகப்பாதுகாப்பு உதவித் திட்டங்களுக்கான அரசாங்கத்தின் செலவினங்களை மட்டுப்படுத்துவதற்கும் முடியும் என ஆளுநர் நந்தலால் வீரசிங்க நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# மன்னார் பிரஜைகள் குழுவுக்கும் ஜே.வி.பிக்கும் இடையே சந்திப்பு

மன்னார், மே. 23

தேசிய மக்கள் கட்சியினருக்கும் மன்னார் பிரஜைகள் குழுவுக்கும் இடையே விசேட சந்திப்பு நேற்று முன் தினம் காலை மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் ராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையிலான குழுவினரும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மாக்கஸ் அடிகளார் தலைமையிலான குழுவினரும், வடமாகாண கடல் தொழில் இணையத்தின் ஊடக பேச்சாளர் என்.எம். ஆலமும் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சியின் நிலைப்பாடு மற்றும் மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டது.

எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை மாலை அனுரகுமார திசாநாயக்க மன்னாருக்கு வருகை தந்து மக்கள் சந்திப்பில் ஈடுபட உள்ளார் எனவும் இதன் போது மன்னார் மாவட்டம் தொடர்பில் தாம் கொண்டுள்ள நிலைப்பாடு மற்றும் ஜனாதிபதித் தேர்தல் குறித்தும் மக்களுக்கு கருத்தை தெரிவிக்க உள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.



மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர், தற்போது மன்னார் மாவட்டத்தில் காணப்படும் 10 பிரதான பிரச்னைகள் குறித்து தெளிவாக தமது கருத்தை முன் வைத்ததுடன், குறித்த விடயங்கள் தொடர்பில் ஜே.வி.பி கரிசனையுடன் செயல்பட்டு முன்நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

குறிப்பாக காற்றாலை மின்சாரம், கனிம மணல் அகழ்வு, காணிகள் அபகரிப்பு, இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றமை உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் குறித்த வழக்கினை விசாரிக்கவேண்டாம்!

## உயர்நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மே. 23

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் 31ஆம் திகதி விசாரணை செய்ய வேண்டாம் என உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சட்டமா அதிபரினால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை சவாலுக்கு உட்படுத்தி கப்பல் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை பரிசீலித்த நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் 31ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்தது.

அதன்படி இந்த மனு மீதான பரிசீலனைகள் முடியும் வரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையை தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு மனுதாரரின் சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்று, வரும் 31ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் தொடர்புடைய வழக்கை விசாரிக்கக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்துக்குள்ளாகி நேற்று முன் தினம் மூன்று ஆண்டுகள் முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அஸ்வெசும உதவி பெறும் கால எல்லை அதிகரிப்பு!

கொழும்பு, மே 23

அஸ்வெசும நலன்புரி உதவிகள் வழங்கப்படும் கால எல்லை அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

பொருளாதார வலுப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி, எதிர்வரும் 2026 ஜூன் 30 ஆம் திகதி வரை அஸ்வெசும நிவாரணத்தை பெற முடியும்.

எனினும், முன்னராக அஸ்வெசும நிவாரணத்தைப் பெற்று இந்த ஆண்டின் இறுதியில் கால எல்லை நிறைவடைபவர்களுக்கான உதவி திட்டம் எதிர்வரும் 2025 ஜூன் 30 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே முதல் பணி!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 23

நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே தனது முதல் பணியாக இருந்தது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் நான்கைந்து வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்துக்கு எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களை விரைவாக எடுக்க வேண்டியிருந்ததாக ஜனாதிபதி தெரிவித்தார்.

நாடு தற்போது பொருளாதார ரீதியில் முன்னேற்றம் கண்டு வருகிறது எனவும், வங்குரோத்து நிலையில் இருந்து முழுமையாக விடுபடுவது தொடர்பாக கடன் வழங்கிய நாடுகளுடன் இப்போது பேச்சு நடத்தி வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகளை சர்வதேச நாணய நிதியம் ஏற்கனவே ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த நிலையில், பாதுகாப்பு விசேட ஏற்பாடுகள் சட்டத்தை சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, தேசிய பாதுகாப்பு சபையை சட்டபூர்வமாக்குவதற்கும் ஆயுதப்படை குழுவை நியமிப்பதற்கும் தான் எதிர்பார்த்துள்ளேன் என்றும் கூறினார்.

அத்துடன், ஓய்வுபெற்ற படையினரின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த புதிய வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

கொழும்பு - பத்தரமுல்லை - அக்குரேகொட பாதுகாப்பு அமைச்சின் வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கை முன்னாள் படையினர் சங்கத்தின் தலைமையக வளாகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# குடிவரவு திணைக்களம் மீது உரிய நடவடிக்கை எடுங்கள்

## ஹர்ஷ டி சில்வா சபாநாயகரிடம் வலியுறுத்தல்

கொழும்பு, மே. 23



விஸா விவகாரம் தொடர்பில் விளக்கமளிக்க குழுவுக்கு முன்னிலையாகுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு அழைப்பு விடுத்திருந்தோம். இருப்பினும் இந்நிறுவனங்களின் அரச அதிகாரிகள் குழுவுக்கு முன்னிலையாகவில்லை. ஆகவே இந்நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து பாராளுமன்றத்தின் ஊடாக உரிய நடவடிக்கைளை முன்னெடுங்கள் என அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற அமர்வில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிலையியற் கட்டளையின் 121 ஆவது பிரிவுக்கு அமைய அரசாங்க நிதி தொடர்பான குழுவுக்கு அரச நிறுவனங்களை அழைத்து விசாரணைகளை முன்னெடுக்கிறோம்.

வி.எப்.எஸ் நிறுவனத்துக்கு விசா விநியோக சேவை வழங்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள சர்ச்சை குறித்து விளக்கம் கோருவதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தை அரசாங்க நிதி தொடர்பான குழுவுக்கு கடந்த 13 ஆம், 14 ஆம் திகதிகளில் முன்னிலையாகுமாறு அழைத்திருந்தோம்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பி.யு.குணதிலக, அமைச்சின் மேலதிக செயலாளர் கருணாரத்ன, பிரதான நிதி அதிகாரி பதிரன மற்றும் சட்ட அதிகாரி உப சிறி உட்பட நால்வரையும், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுப்பிட்டிய,மேலதிக கட்டுப்பாட்டாளர் இமால் குணவர்தன, நிதி முகாமைத்துவ அதிகாரி பி.ஜயசிங்க ஆகியோரை குழுவுக்கு முன்னிலையாகுமாறு அழைத்திருந்தோம்.

அரசாங்க நிதி தொடர்பான குழுவுக்கு முன்னிலையாகுவதாக குறிப்பிட்டுக் கொண்டு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் குடிவரவு,குடியகல்வு திணைக்களம்."தாம் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அலுவலகத்தை மாற்றினோம். ஒரு சில கோப்புக்கள் கிடைக்கவில்லை.

ஆகவே குழுவுக்கு முன்னிலையாக முடியாது என்று குறுஞ்செய்தி அனுப்பி வைத்துள்ளார்கள். பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் குடிவரவு,குடியகல்வு திணைக்களத்தின் விருப்பத்துக்கு அமைவாகவே திகதி ஒதுக்கப்பட்டது.ஆகவே குழுவுக்கு முன்னிலையாகுமாறு அறிவித்திருந்தேன்.

நிதி தொடர்பில் பாரிய பிரச்னை எழுந்துள்ள நிலையில் அது குறித்து குழுவுக்கு முன்னிலையாகுமாறு அழைப்பு விடுத்தால் இந்நிறுவனங்கள் கட்டாயம் குழுவில் முன்னிலையாக வேண்டும்.ஆனால் இவர்கள் முன்னிலையாகவில்லை.

இது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறும் ஒரு செயற்பாடாகும்.மக்களின் பிரச்சினை பற்றி பேசுகிறோம்.ஆகவே அரச நிறுவனங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரிகளின் பொறுப்பற்ற செயற்பாடு தொடர்பில் பாராளுமன்றம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (அ)

# தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம் நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 23

சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் நேற்று புதன்கிழமை ஆரம்பமானது. இந்தப் போராட்டம் நாளை வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

விகாரையில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நேற்றைய போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் மற்றும் கட்சியினர், பொதுமக்கள் பங்கேற்றனர். (ஐ)

### போருக்கு...

கைதியாக தடுத்து வைக்கப்பட்டிருந்தவருமான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கருத்துரைக்கையில், "குருந்தூர்மலை ஆலய விவகாரம் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையிலான பிரச்னையல்ல, சிங்களம் மற்றும் தமிழர்களுக்கு இடையிலான பிரச்னையாகும். சிங்களவர்கள் இந்தப் பகுதிக்கு உரிமை கோருவது தமிழ் பௌத்தர்களுக்கு அவர்கள் இடமளிக்கத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை என்பதையே காட்டுகிறது - என்றார்.

இலங்கையில் சமத்துவம் மற்றும் நிவாரணத்துககான மக்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மதுர இராசரத்தினம் - "வடக்கு - கிழக்கின் தமிழ் பேசும் பிரதேசங்களில் அரச அனுசரணையுடன் சிங்கள - பௌத்த மயமாக்கல் முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் தையிட்டி, மட்டக்களப்பில் மயிலத்தமடு, முல்லைத்தீவில் நீராவியடி போன்ற பல இடங்களை சுட்டிக்காட்டலாம் - என்றார்.

பெண்கள் செயல் வலையமைப்பின் இணை நிறுவனர் செரீன் அப்துல் சரூர், "பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் இலக்குகளாக முஸ்லிம்கள் மாறியிருக்கின்றனர்" எனக் கூறினார்.

இந்தநிலையில் பயங்கரவாதத் தடைச் சட்டம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை சட்டம் மற்றும் இணைய பாதுகாப்பு உள்ளிட்ட சட்ட மூலங்கள் மற்றும் மத சிறுபான்மையினரை விகிதாசாரத்தில் குறிவைக்கும் பல கொள்கைகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது என்று சர்வதேச ஆணைக்குழு கூறியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு அன்று பயங்கரவாதத் தாக்குதல்கள் நடைபெற்று ஐந்து வருடங்கள் கடந்துள்ள போதிலும், இதுவரை எவரும் பொறுப்புக் கூறப்படவில்லை என இலங்கையின் தேசிய கிறிஸ்தவ சுவிசேசக் கூட்டணியின் தலைவர் மைக் கேப்ரியல் ஆணைக்குழுவிடம் தெரிவித்தார். (ஐ)

### ஷிராந்தி...

உரையாற்றிக்கொண்டிருக்கும் மாணவி ஒருவரின் புகைப்படத்தில் படையினரிடம் கையளிக்கப்பட்ட தமிழ்க் குழந்தை ஒன்று இருப்பதாக அந்த குழந்தையின் பெற்றோர் கூறுகின்றனர்.

அது தொடர்பான புகைப்படத்தை இந்த உயரிய சபையில் நானும் காண்பித்திருந்தேன்.

எனினும், அது குறித்து விசாரித்த போது அப்படியொரு மாணவி இல்லையென கூறப்படுகின்றது. இந்த குழந்தைகளுக்கு என்ன நடந்தது.

இதனையே அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் கேட்டிருந்தார்.

2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, உள்ளக பொறிமுறை மூலம் ஒரு தீர்வை காணுகின்றோம் என தெரிவித்திருந்தார்.

அதற்காக வெளிநாட்டு நிபுணர்களிடம் இருந்து சட்ட ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் இதுவரை இந்த மண்ணில் அவ்வாறு நடக்கவில்லை.

இந்நிலையில், காணாமல்போன குழந்தைகள், படையினரிடம் சரணடைந்த போராளிகள் உள்ளிட்டவர்களை சர்வதேச நீதியின் மூலமாகவே கண்டுபிடிக்க முடியும்.

எனினும், இலங்கைக்குள் அது நடக்காது, இங்கு கொலை செய்தவர்கள் சுதந்திரமாக இருக்கின்றார்கள். சில சர்வதேச நாடுகளில் அவர்களுக்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே இலங்கையில் உண்மை, நியாயம், சத்தியம் மரணித்துவிட்டது. சட்டம் இங்கு செயலில் இல்லை - என்றார். (அ)

### வாக்காளர்...

பட்டுள்ளன என்று தேசிய தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவின் துணை மற்றும் கூடுதல் ஆணையாளர்களால் மறுஆய்வு செயல்முறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எதிர்வரும் ஜூன் 30ஆம் திகதிக்குள் இந்த செயல்முறை நிறைவடையும். இதன்படி, ஜனாதிபதித் தேர்தல் அல்லது ஜூலை மாதத்துக்குப் பிறகு நடைபெறும் எந்தத் தேர்தலையும் புதிய வாக்காளர் பட்டியலின்படி நடத்த முடியும் - என்றார். (ஐ)

### சீரற்ற...

பொலநறுவை ஆகிய 13 மாவட்டங்களே பாதிப்புகளை சந்தித்துள்ளன.

இதேநேரம், இந்த அனர்த்தங்களால் இரு வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. 531 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### பொலிஸ்...

ஆகியோரே காயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட முரண்பாடே இந்த வாள்வெட்டுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. இந்த வாள்வெட்டை நடத்தியவர் காங்கேசன்துறை பொலிஸின் சிறப்பு பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர் என்று கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ஐ)

### செப்.15...

முதல் ஜூன் 14 ஆம் திகதி வரை இணையவழியில் அனுப்பி வைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### ஜனாதிபதித்...

அரசியல் களத்தில் பேசப்பட்டு வந்தது.

அத்துடன், விரைவில் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்ற பேச்சும் அடிபட்டது. இவ்வாறான நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளார். (அ)

### வலி.வடக்கில்...

அண்மையிலேயே பாதைகள் திறந்து விடப்பட்டன. இந்நிலையில், விடுவிக்கப்பட்ட 234 ஏக்கர் நிலங்களில் 55 ஆயிரம் சதுர அடி பரப்பில் வெடி பொருட்கள் காணப்படுகின்றன என்று கூறி காணிகளின் உரிமையாளர்கள் அங்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ஐ)

### அமெரிக்கா...

ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும்.

2009இல் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை தம்மிடம் கையளிக்குமாறு அமெரிக்கா கோரியிருந்தது. இதற்காக அமெரிக்கா கப்பலையும் அனுப்பியது. மேலும், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளும் பிரபாகரனை தம்மிடம் கையளிக்குமாறு கோரியிருந்தன. எனினும், அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை" என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## பல கோடிகளை சுருட்டியவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, மே 23

ஜா - எல பகுதியிலுள்ள மசாஜ் நிலையத்தை நடத்திய பெண் ஒருவர் சோயா பொருட்களைப் பொதி செய்து அதிக விலையில் விற்று பண மோசடியில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

41 வயதுடைய இந்தப் பெண் கடவட சூரியகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன் இவர் நுகே கொடாவல பகுதியில் வாடகை அடிப்படையில் வீடொன்றைப் பெற்று இந்த மோசடியில் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மருந்துவத்துறையில் பணியாற்றி வரும் இந்தப் பெண் பொதி செய்யப்பட்ட சோயா பொருட்களை இணையத்தில் விளம்பரமாக வெளியிட்டு அதிகமானோரிடம் பல கோடி ரூபாய் மோசடி செய்துள்ளார்.

இத்துடன் இந்த வியாபாரம் பிரமிட் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதுடன் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## எமது ஜனாதிபதி வேட்பாளரை இரு வாரங்களில் அறிவிப்போம்

### இப்படி சொல்கிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, மே 23

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுவேட்பாளராக களமிறக்க தீர்மானித்தால் அதற்கு முழுமையான ஆதரவு வழங்குவோம். எமது வேட்பாளரை இன்னும் இரு வாரங்களில் அறிவிப்போம் என கடற்றொழில் வளங்கள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.

கடற்றொழில் வளங்கள் அமைச்சின் பணிமனையில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான பரந்துபட்ட அரசியல் கூட்டணி அமைப்பதற்கு சகல தரப்பினருடனும் பேச்சில் ஈடுபட்டுள்ளோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுவேட்பாளராக களமிறக்க கட்சி மட்டத்தில் தீர்மானம் எடுத்தால் அதற்கு முழுமையாக ஆதரவு வழங்குவோம். யாரை வேட்பாளராக அறிவிப்பது என்பது தொடர்பில் விரிவான பேச்சு முன்னெடுக்கப்படுகிறது.

எமது ஜனாதிபதி வேட்பாளரை இன்னும் இரு வாரங்களில் அறிவிப்போம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுவேட்பாளராக கட்சி அறிவிக்குமாயின் அதனை முழுமையாக வரவேற்போம். ஏனெனில், 2022ஆம் ஆண்டு அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் அரசாங்கத்தை பொறுப்பேற்கவில்லை. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனிமனிதராக அரசாங்கத்தை பொறுப்பேற்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தால் குறுகிய காலத்தில் நாடு வழமைக்கு திரும்பியுள்ளது. ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தை மீண்டும் தோற்றுவிப்பதற்கு பொதுஜன பெரமுன தீர்மானித்தால் அதற்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (ஐ)

## பெண் பாலியல் வன்புணர்வு பொலிஸ் சார்ஜன்ட் கைது!

கொழும்பு, மே 23

பொலிஸ் சிற்றுண்டிச்சாலையில் பணிபுரிந்த பெண்ணை வன்புணர்வு செய்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக குருநாகல் - பிங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

பிங்கிரிய பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிங்கிரிய பொலிஸ் நிலையத்தில் சிற்றுண்டிச்சாலை ஒன்றை நடத்தும் 50 வயதுடைய பெண்ணே சிற்றுண்டிச்சாலையில் வைத்து வன்புணரப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் சந்தேக நபரான சார்ஜன்ட்டை கைது செய்தனர். (ஐ)

# ஜனாதிபதி தேர்தலில் பொன்சேகா போட்டி!



### ஜூன் மாதம் உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு, மே 23

**முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஐக்கிய மக் கள் சக்தியிலிருந்து விலகி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வுள்ளார் என டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது. ஜூன் மாதம் அவர் இதுகுறித்த உத்தியோகபூர்வமான அறிவிப்பை வெளியிடவுள்ளார். எந்த கட்சியுடனும் சேராமல் சுயேச்சை வேட்பாளராக அவர் போட்டியிடவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் ஆதரவை சரத் பொன்சேகா பெற்றுள்ளார். ஏனைய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இரகசிய பேச்சுகள் தொடர்கின்றன என பொன்சேகாவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

சரத் பொன்சேகா தனது தேர்தல் பிரசாரத்தின் போது ஊழல் அற்ற நாடு மற்றும் தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அறகலயவின் போது போராட்டக்காரர்களுக்கு ஆதரவு வெளியிட்ட சரத் பொன்சேகா அந்தச் சந்தர்ப்பத்தில் தனக்கு கிடைத்த ஆதரவை பயன்படுத்த முயல்வார்.

தனது பிரசாரத்தின்போது அவர் புத்திஜீவிகள், பிரபல பிரமுகர்களுடன் இணைந்து செயல்படுவார்.

இதேவேளை, தேர்தல் பிரசார காலத்தில் சரத் பொன்சேகா போர் குறித்த நூலை வெளியிடவுள்ளார். இந்த நூலில் யுத்தம் குறித்த பல முக்கிய விடயங்கள் இடம்பெற்றிருக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதிநிதியாக முன்னாள் இராஜதந்திரியொருவர் சரத் பொன்சேகாவை சந்திப்பதற்கான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பினை நிராகரிக்காத சரத் பொன்சேகா எனினும் தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முடிவை கைவிடப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைவருக்கும் சந்தர்ப்பம் வேண்டும்

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, மே 23

இந்த நாட்டின் எதிர்காலம் தொடர்பான கொள்கைப் பிரச்னைகள் தொடர்பில் விவாதம் நடத்தினால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறந்த அரட்டையாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான விவாதம் நடத்தப்படுகிறது எனவும் அதற்கான இரண்டு சிறந்த வேட்பாளர்களும் சஜித் மற்றும் அநுர எனவும் நாமல் குறிப்பிட்டார்.

கொழும்பு - பூஜாபிட்டிய திவாவத்த சிறீ போத்திருக்கராம விகாரையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே நாமல் மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்வரும் எந்தவொரு தேர்தலுக்கும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன தயாராக இருப்பதாகவும், கிராமம் கிராமமாக 10 பேர் கொண்ட பலத்தை அணி திரட்டி கட்சியைப் பலப்படுத்தும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கியத்தையும் கலாசாரத்தையும் பேணிக் காத்து நாட்டை பொருளாதார அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்லும் வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் குறுகிய அரசியல் சாதகங்களைப் பொருட்படுத்தாது முன்னோக்கிச் செல்வது முக்கியம் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அடுத்த தேர்தல் வரை ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகபட்ச ஆதரவு வழங்கப்படும் என்றும் தேர்தலுக்குப் பிறகு அடுத்தகட்ட நடவடிக்கைகள் திட்டமிடப்படும் எனவும் நாமல் மேலும் கூறினார். (எ)

### 20 கோடி ரூபாய் பெறுமதியான

# கொக்கையின் போதைப்பொருடன் பிலிப்பைன்ஸ் பெண் சிக்கினார்

கொழும்பு, மே 23

20 கோடி ரூபாய் பெறுமதியான கொக்கையின் போதைப்பொருளுடன் பிலிப்பைன்ஸ் நாட்டுப் பெண்ணொருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். 47 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.



எதியோப்பியாவிலிருந்து விமானம் மூலம் கட்டாருக்குச் சென்று பின்னர் அங்கிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இவர் கொண்டு வந்த பயணப்பொதிகளில் இருந்து மிளகாய் தூள் மற்றும் கோதுமை மா அடங்கிய மூன்று பொதிகளுடன் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 கிலோ கிராம் 861 கிராம் கொக்கையின் போதைப் பொருள் அடங்கிய மூன்று பொதிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவரது நெருங்கிய நண்பர் ஒருவர் மூலம் இந்த விமானப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த போதைப்பொருளை இலங்கைக்குக் கொண்டு வருவதற்காக இவருக்கு 1,000 அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்தது.

இவர் இதற்கு முன்னர் மலேசியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கும் விமானம் மூலம் இவ்வாறு போதைப்பொருட்கள் கொண்டு சென்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட பெண் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்கா விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.